# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 60வது கூட்டறிக்கை 2023.03.09

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 60வது அமர்வு 2023.03.09 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ தவிசாளர் | ஐ.தே.க |
| 02. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 05. ஜனாப்.எம்.ஏ.தம்பிக்கண்டு | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 06. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 09. ஜனாப்.ஏ.ஏ.சீ.எம்.நிசாம் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப்.பீ.எம்.மீரா முகைடீன் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 12. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 13. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 14. ஜனாப்.ஏ.எச்.அன்வர் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 15. ஜனாப்.ஏ.எம்.நபீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 16. திருமதி.எஸ்.இராஜேஸ்வரி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 17. ஜனாப்.ஏ.எச்.எம்.காலித் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. திருமதி.ஏ.பீ.ஏ.சஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 60வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

கடந்த வருடம் நிறைவடைய வேண்டிய எங்களுடைய சபையின் காலம், ஒரு வருடம் நீடிக்கப்பட்டதனால் இந்த வருடம் இந்த அமர்வு கடைசி அமர்வாக இடம்பெறுகின்றது. சில வேளைகளில் பாராளுமன்றத்திலே சட்டம் இயற்றி நீடிப்பதற்கும் வாய்ப்பு இருக்கின்றது. அல்லது கலைத்துவிட்டு விசேட ஆணையாளரின் கீழ் கொடுப்பதற்கும் வாய்ப்பு இருக்கின்றது. இருந்த போதிலும் இருக்கின்ற சட்டங்களின்படி குறிப்பிட்ட காலம் முடிவடைந்ததன் பின்னர் செயலாளரின் முழு பொறுப்பிலே இந்த சபை இயங்கும் என்பதை கூறிக்கொண்டு, இந்த சபைக்கு புதிய அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்ற கௌரவ உறுப்பினர் காலித், கௌரவ உறுப்பினர் ராஜேஸ்வரி, கௌரவ உறுப்பினர் மீரா முகைடீன் அவர்களையும் வரவேற்று இந்த சபையை முன்னெடுக்கலாம் என்று நினைக்கின்றேன்.

இவ் அமர்வின் அடுத்த அம்சமாக சென்ற மாத கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். திருத்தங்கள் இருந்தால் கூறலாம். இல்லாவிட்டால் ஒருவர் ஆமோதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.நபீல் |

கூட்டறிக்கை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த சபைக்கு முதல் முறையாக வந்திருக்கின்ற எங்களது கௌரவ உறுப்பினர்களின் கன்னி உரை. அதில் முதலாவது கௌரவ உறுப்பினர் மீரா முகைடீன் அவர்களே, உங்களது கன்னியுரையை ஆற்றுமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் பீ.எம்.மீரா முகைடீன் அவர்கள்:**
பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம். கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று 04வது சபையின் 60ஆவது அமர்வில் கலந்து கொள்வதற்கு வாய்ப்பளித்த எல்லாம் வல்ல இறைவனை புகழ்ந்தவனாக, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவரும் முன்னாள் அமைச்சரும் இந்நாள் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் அவர்களுக்கு நன்றி கூறியவனாக, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் சம்மாந்துறை தொகுதி அமைப்பாளரும் இச்சபையின் தற்போதைய பன்னிரண்டாவது தவிசாளருமான அல்ஹாஜ் ஐ.எல்.எம்.மாஹிர் சேர் அவர்களுக்கும் எங்களது கட்சியின் அம்பாறை மாவட்ட செயலாளர் காதர் சேர் அவர்களுக்கும் நன்றி கூறி, எனது கன்னி உரையை ஆரம்பிக்கலாம் என்று நினைக்கின்றேன்.

அல்ஹம்துலில்லாஹ் எனது அரசியல் பயணத்தில் இன்றய எனது கன்னியுரை 04வது சபையின் இறுதி உரையாகவும் அமைவதை பார்க்கும் போது இவ்வாறும் வரலாற்றுச் சம்பவங்கள் இடம் பெறும் என்றும் படிப்பினையும் பெறுகின்றோம். என்னைப் பற்றி சில வரிகள் கூறலாம் என்று நினைக்கின்றேன். இந்த உயரிய சபையிலே இருக்கின்ற கௌரவ தவிசாளர், சக கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் கட்சிகள் வேறாக இருந்தாலும் எமது நோக்கம் சமூக சேவை என்பதுதான். நான் சிறுவயதிலே இருந்து எனது பிரதேச மக்களுக்கு முறைப்பாடுகள் எழுதுவது, பொது விடயங்களில் ஈடுபடுவது இவ்வாறு இருக்கும் பட்சத்தில் பாடசாலை காலத்தில் பல தலைமைத்துவ பதவிகளும், உயர்தரம் படிக்கின்ற காலத்தில் விழிப்புக் குழு தலைவராகவும் அப் பிரதேச மக்கள் தெரிவு செய்தார்கள். ஊரை பாதுகாப்பது எனது பொறுப்பு என்று சிவில் பாதுகாப்பு படையில் பயிற்சி பெற்று சம்மாந்துறை மற்றும் அதன் பாதுகாப்பு பிரிவில் உள்ள உப முகாம்களில் கடமையாற்றிய அனைத்து சிப்பாய்களின் நிர்வாக பொறுப்புகளை செய்து கொண்டு 1996 ஆம் ஆண்டு தொழில்நுட்பக் கல்லூரியிலே NCE முழு நேர கற்கை நெறியை செய்து கொண்டு, சகல படைகளுடைய நேர்முகப் பரீட்சைகளுக்கும் சென்று தெரிவு கண்டபோதிலும் எனது பெற்றோர் அவைகளுக்கு செல்லாமல் என்னை தடுத்து படிப்பு தான் என்று முக்கியம் என்று சொல்லிய காலகட்டத்தில் பிரித்தானியர் காலத்தில் சிலோன் ஆமியிலே இருந்த எனது முத்தப்பா மர்ஹூம் துவான் அவர்கள் எனது திறமையில் மிகவும் அக்கறை காட்டி என்னை உற்சாகப்படுத்தி வந்தார்.

இலங்கை விமானப்படையில் Operation Air Branch பிரிவில் Air Traffic Controller ஆக சேர்ந்தேன். Compact Training School ஜியத்தலாவையில் பயிற்சி பெற்று கடமையாற்றிக் கொண்டிருந்த பின்னர் Advance Tred Training மற்றும் Sky Diving போன்ற பயிற்சிகளுக்கு செல்ல எனது பெற்றோர்கள் எனக்கு அனுமதி அளிக்கவில்லை. என்னுடன் இருந்த அன்பின் காரணமாக, பின்னர் சில காலம் வெளிநாட்டில் கெப்டனாக இருந்துவிட்டு 2006 ஆம் ஆண்டு நாட்டிற்கு வந்து இறங்கியதும் மர்ஹூம் அன்வர் இஸ்மாயில் அவர்கள் எனது அரசியலுக்கு வித்திட்டார்கள். என்னை UPFA கட்சியில் பிரதேச சபை தேர்தலில் களமிறக்கினார்கள். அப்போது இறக்காமப் பிரதேச சபையும் எம்மோடு இருந்த காலம். அன்று இதர வேட்பாளராக கௌரவ உறுப்பினராக இங்கே இருக்கின்ற ஜிப்ரி அவர்கள் மற்றும் கௌரவ உறுப்பினர் நபீல் அவர்கள் நாங்கள் எல்லோரும் ஒரு அணியிலே நின்று சொற்ப வாக்குகளால் அதாவது 35 மனாப்பையால் நான் இந்த சபையினை இழந்து ஆறாவது இடத்தை அடைந்து ஐந்தாவது இடத்தில் இருந்தவர் சபைக்குள் சென்றிருந்தார். என்னால் செல்ல இயலாத நிலை ஏற்பட்டது. அன்று இந்த பயணத்தை மேற்கொண்டதற்கான காரணம் எனது சமூக சேவையில் இருந்த அக்கறையாகத்தான் பார்க்கின்றேன்.

பின்னர் 2006ம் ஆண்டு இருந்து நான் சம்மாந்துறை விளையாட்டு வளாக கட்டடத்திலே கடமையாற்றிக் கொண்டு, 2011 ஆம் ஆண்டு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முன்னாள் தவிசாளர் அவர்களுடன் மீண்டும் UPFA கட்சியில் போட்டியிட்டு வெற்றி பெற்று, எனது வேலையையும் விட்டு எனது முழு நேரத்தையும் பொது வேலைகளில் கழித்து பல சேவைகளையும் நான்கு வருடமும் இரண்டு மாதமும் 50 அமர்வுகளில் தவறாது கலந்து கொண்டு அதன் பின்னர் 2018 ஆம் ஆண்டு ACMC கட்சியின் வேட்பாளராக வட்டாரத்தில் தோல்வி அடைந்து இறுதியாக இந்த நான்காவது சபையின் பூர்த்தியாகும் நிகழ்வில் என்னையும் உங்களுடன் அல்லாஹ் பொருந்தி இருக்கின்றான் என்பதில் சந்தோஷம் அடைகின்றேன். இறுதியாக கௌரவ தவிசாளர் அவர்களே சமூக சேவையாளர்கள் என்பவர்கள் ஒரு மெழுகுவர்த்தி போன்று அது எரிந்தால் ஊருக்கு வெளிச்சம் அவ்வாறு என்றால் தன்னை உருக்கி பிறருக்கு வெளிச்சத்தை கொடுத்து தன்னை தானாகவே அழித்துவிடும். அதுபோன்று நாம் எல்லோரும் மெழுகுவர்த்தியின் நிறங்களும் தோற்றமும் வேறாக இருக்கலாம்.

ஆனால் வெளிச்சத்தின் நிறமும் பயன்பாடும் ஒன்றாகத்தான் இருக்கும். கட்சிகள் வேறாக இருக்கலாம் எங்களுடைய கொள்கைகள் வேறாக இருக்கலாம் ஆனால் சேவை ஒன்றுதான் சமூகம் என்ற எண்ணத்தில் செயற்பட்டு தங்களது நேரம் பொருளாதாரம், உடல் உள ஆரோக்கியம் எல்லாவற்றையும் இழந்து இப் பதவியை விட்டு செல்லுகின்ற போது வேதனையோடும் உண்மையான சமூக சேவையாளன் என்பவன் அவ்வாறுதான் நினைத்துக் கொண்டு செல்வான். நான் பதவி ஏற்று இன்றுடன் 13 நாட்கள் ஆகின்றது. வல்ல அல்லாஹ்வின் உதவியுடனும் கௌரவ தவிசாளர் அவர்களின் உதவியுடனும் இந்த 13 நாட்களுக்குள் நிறைய வேலைகள் செய்திருக்கின்றோம். எங்களது நீர் பாசன பொறியியலாளர் நவாஸ் அவர்களை சந்தித்து ஒரு சிறிய பாலம் ஒன்றை அமைப்பதற்கு கௌரவ தவிசாளரும் நானும் மேற்கொண்ட நடவடிக்கையில் அதை அவர் செய்து தருவதாக உறுதியளித்திருக்கின்றார். S - 20 வாய்க்காலிலே, அதேபோன்று எங்களுடைய ஹிஜ்ரா புரத்திலே குடிநீர் பிரச்சினை இருக்கின்றது. அங்கு பைப் இடவில்லை.

அதற்கான நடவடிக்கையை கௌரவ தவிசாளர் அவர்கள் மேற்கொண்டு அந்த ஊர் மக்களுக்காக நேற்று முன்வந்து அதனுடன் தொடர்புபட்ட குடிநீர் வடிகால் அமைப்பு சபையின் இன்ஜினியர் நசீர் மற்றும் சம்மாந்துறை நீர்ப்பாசன துறையினுடைய பொறுப்பதிகாரி பாஹிம் அவர்களையும் கொண்டு சென்று அந்தப் பிரச்சினைக்கு தீர்வு எடுத்தார். அத்தோடு எமது சபையினுடைய ஒத்தாசையும் தேவைப்படுகின்றது. இது எங்களது கௌரவ தவிசாளர் அவர்களது பொறுப்போ எனது பொறுப்போ மாத்திரம் அல்ல இந்த சபையில் இருக்கின்ற சகல அங்கத்தவர்களுக்கும் இந்த பொறுப்பு இருக்கின்றது. அதே நேரம் அதற்கான உதவிகளை எல்லோரும் ஆமோதித்து செய்ய வேண்டும் என்று கேட்டு, இந்த இடத்திலே எங்களால் முடிந்ததை இருக்கின்ற காலத்திற்குள் செய்து சபையை கொண்டு செல்வதற்கும் ஒரு சிறந்த சபையாக இந்த சபையினுடைய முடிவு அமைய வேண்டும். இதிலே வாதப் பிரதிவாதங்கள் வருகின்ற போது நாங்கள் கட்சி பேதங்களுக்கு அப்பால் விட்டுக் கொடுத்து நல்ல சபையை நாங்கள் விட்டுச் சென்றவர்களாக இருக்க வேண்டும் என்று கேட்டு, இந்த இடத்திலே எனக்கும் பேச வாய்ப்பு தந்த கௌரவ தவிசாளர் அவர்களுக்கு நன்றி கூறி, எனது உரையில் ஏதாவது பிழை இருந்தால் மன்னித்து கொள்ளுங்கள் என்று கேட்டு விடை பெறுகின்றேன் வஸ்ஸலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.ராஜேஸ்வரி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உப தவிசாளர் அவர்களே, மற்றும் ஏனைய கௌரவ உறுப்பினர்களே, பிரதேச சபை செயலாளர் அவர்களே, அனைவரையும் வரைவேற்றவளாகவும், இந்த அமர்வுக்கு கலந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்த இறைவனுக்கு முதற்கண் நன்றியை செலுத்தியவளாகவும், அடுத்த கணம் என்னை அரசியல் பயணத்திற்கு வித்திட்ட சகோதரர் மோகன் அவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றிகளை கூற கடமைப்பட்டுள்ளேன். அத்தோடு இப்பிரதேச சபைக்கு உறுப்பினராக என்னை அறிமுகம் செய்த முன்னாள் கௌரவ உப தவிசாளர் வீ.ஜெயச்சந்திரன் அவர்களுக்கும், எனது கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சிக்கும், ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் சம்மாந்துறை பிரதேச அமைப்பாளர் ஏ.எச்.அன்வர் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு, இப்பிரதேச சபைக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். இன மத

வேறுபாடுகள் இன்றி தமிழ் பிரதேசங்களுக்கு பிரதேச சபை சுத்தம் செய்யும் பணியினை திறன் பட செய்வதற்கு எனது இதயபூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். என்னை நம்பி வாக்களித்த மக்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இச்சந்தர்ப்பத்தில் என்னை அறிமுகம் செய்து வைக்கலாம் என்று நினைக்கின்றேன். நான் ஒரு முன்பள்ளி ஆசிரியர். எனது அனுபவம் 24 வருடங்களை கடந்துள்ளது. அத்தோடு பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தில் பத்து வருடங்களாக தமிழ் பிரிவு – 4, மட்டக்களப்புத்தரவை – 02, புளக் ஜே கிழக்கு - 02 போன்ற கிராம சேவகர் பிரிவுகளில் எனது சமூகப் பணி இடம்பெற்று வருகின்றது. அத்தோடு போனாடியஸ் தலைவியாகவும், கலைவாணி மகளிர் சங்கத்தின் செயலாளராகவும் தற்போது சமூகப் பணியிலும் ஈடுபட்டு வருகின்றேன். இப்பணிதான் என்னை அரசியல் பயணத்திற்கு வித்திட்டது. அதன் பயனாக கோரக்கர் மண்ணின் வரலாற்றிலே முதன்முறையாக ஒரு தமிழ் பிரதேச சபைக்கு உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டது எனது மண்ணுக்கு கிடைத்த வரலாற்று சாதனை பதிவாக இடம் பிடித்துள்ளது. இறைவன் நாடியுள்ளான் சபையின் கடைசி வருடத்தில் கடைசி மாதத்தில் பிரதேச சபை உறுப்பினராக பதவியேற்று வாழ்நாளில் மறக்க முடியாத சம்பவமாக பதிவிடப்பட்டுள்ளது. இது என்னுடைய கன்னி உரையும், இறுதி உரையுமாக அமையும். ஆகவே இந்த சபை இருக்கும் வரைக்கும் நாங்கள் இருக்கும் வரைக்கும் கௌரவ தவிசாளர் அவர்களுக்கு என்னால் இயன்ற ஒத்துழைப்புகளை வழங்கி இந்த சபையை நடாத்தி செல்வதற்கு உறுதி கூறி, இச் சந்தர்ப்பத்தை வழங்கிய கௌரவ தவிசாளர் அவர்களுக்கு நன்றியை கூறிக்கொண்டு, எனது கன்னி உரையை முடித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எச்.எம்.காலித் அவர்கள்:**
பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம், இறைவனைப் புகழ்ந்தவனாக, சபைக்கு தலைமை தாங்கும் கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உப தவிசாளர் மற்றும் ஏனைய மேலான சக கௌரவ உறுப்பினர்களே, சபையின் செயலாளர் அவர்களே, அனைவரையும் விழித்தவனாக அஸ்ஸலாமு அலைக்கும்/வணக்கம்.

கௌரவ தவிசாளர் அவர்களே, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பட்டியல் உறுப்பினராக இச்சபைக்கு வருகை தந்ததையிட்டு இந்த ஊர் சார்பாக பெருமிதம் கொள்கின்றேன். இதற்காக எனது கட்சியின் மதிப்புக்குரிய தலைவர் முன்னாள் அதிமேதகு ஜனாதிபதியும் தற்போதய கௌரவ பாராளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிரிசேன மற்றும் கட்சியின் செயலாளரும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர, மற்றும் திகாமடுல்ல மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான சிரேஷ்ட சட்டத்தரணி கௌரவ சிறியானி விஜயவிக்ரம, அதே போன்று முன்னாள் சம்மாந்துறை பிரதேச சபையின் உப தவிசாளரும், மாவட்ட அமைப்பாளரும், கட்சியின் விசுவாசியுமான கௌரவ வெள்ளி ஜெயச்சந்திரன் அவர்களுக்கும், மேலும் தனது உயிரை துச்சமென நினைத்து. கடந்த 2015 ஜனாதிபதித் தேர்தல், மற்றும் 2018 உள்ளூராட்சிமன்ற தேர்தல் போன்றவைகளில் கட்சியின் வெற்றிக்காக அளப்பெரும் பாடுபட்ட எனது அன்புக்குரிய சகோதரர் கட்சியின் மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களுக்கான அமைப்பாளர் கௌரவ உறுப்பினர் அப்துல் ஹமீட் அன்வர் (றமீஸ்) அவர்களுக்கும், எல்லாவற்றிக்கும் மேலாக எமது கட்சிக்கு வாக்களித்து எம்மை அவர்களின் சேவகனாக மாற்றிய மக்களுக்கும் இத் தருணத்திலே எனது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, இச் சந்தர்ப்பத்தை வழங்கிய கௌரவ தவிசாளர் அவர்களுக்கு நன்றியை கூறிக்கொண்டு, எனது கன்னி உரையை முடித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கன்னி உரையை ஆற்றிய கௌர உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்தவனாக, சம்மாந்துறை பிரதேச சபையை பொறுத்தவரையிலே கடந்த நான்கு மாதங்களாக பழுதான தெருவிளக்குகளை மாற்றீடு செய்வதற்கான எந்தவித கொள்வனவும் இடம் பெறாமல் இருந்தது. தற்போது இந்த சபையில் தவிசாளராக என்னை தெரிவு செய்ததன் பின்னர் மின்விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டு ஒரே நேரத்தில் எல்லா இடங்களிலும் மின் விளக்குகள் மாற்றீடு செய்ய வேண்டி இருக்கின்றது. அறுவடை முடிந்த காலம், யானைத் தொல்லைகள் கூடிய காலம் என்பதனால் ஊரின் பல இடங்களிலே இந்த

மின் விளக்குகள் போட வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. பல கௌரவ உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்கள். பொதுமக்களும் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்கள். அந்த வேண்டுகோளை ஏற்று இயலுமான வரையில் நாங்கள் மின்விளக்குகளை மாற்றீடு செய்வதோடு, முக்கியமான இடங்களில் புதிதாகவும் சில இணைப்புகளை ஏற்படுத்தி உள்ளோம் என்பதையும் கூறிக்கொண்டு,

சபையின் நிதி நிலைமையை பற்றி கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் அறிய வேண்டும் என்பதற்காக சில விடயங்களை கூறலாம் என்று நினைக்கின்றேன். கௌரவ முன்னாள் தவிசாளர் அவர்கள் திறமையான ஒரு நிர்வாகத்தை செய்து தூர நோக்கோடு கிட்டத்தட்ட 28.5 மில்லியன் ரூபா நிலையான வைப்பிலே இட்டு சென்றிருந்தார். அவர் இறுதியாக இராஜினாமா செய்த அன்று 7.5 மில்லியன் ரூபா நிலையான வைப்பில் இருந்து மீள பெறப்பட்டு Current Account இற்கு மாற்றப்பட்டிருக்கின்றது. ஆகவே தற்போது கையிருப்பிலே 22 மில்லியன் இருக்கின்றது. நான் தவிசாளராக வந்து நிலையான வைப்பில் இருந்து ஒரு சதம் கூட நாங்கள் எடுக்கவில்லை என்பதை மிகவும் பொறுப்புடன் கூறிக் கொள்வதோடு, அந்த நிலையான வைப்புகளுக்குரிய வட்டி வீதம் ஆரம்பத்திலே 5.5% வீதமாக இருந்து 7.7% வீதமாக இருந்து இறுதியாக 11.75% வீதமாக இருந்தது. நான் தவிசாளரானதன் பின்னர் வங்கி முகாமையாளர்களுடன் பேசி வட்டி வீதத்தை அதிகரித்து இன்று வரை 25% வீதமாக வட்டி வீதத்தை அதிகரித்திருக்கின்றேன்.

இது எங்களுடைய பணம் அல்ல. பொதுமக்களின் சொத்து இதனை நாங்கள் பாராமல் விட்டிருந்தால் இருக்கின்ற 22 மில்லியனும் 11.75% வீதத்தில் தான் இருந்திருக்கும். வங்கி முகாமையாளர்களிடம் இருந்து எழுத்து மூல கடிதங்களை பெற்றிருக்கின்றேன். அவர்கள் 25% வீதத்தில் எமது நிலையான வைப்புகளை தொடர்வதற்காக, இன்னும் பேரம் பேசிக் கொண்டிருக்கின்றேன் வட்டி வீதத்தை கூட்டலாமா என்று, வட்டிக் கணக்கு பார்ப்பது இஸ்லாமியன் என்ற அடிப்படையிலே எனக்கு மனதிற்கு விரோதமான ஒரு செயலாக இருந்தாலும் அமர்ந்திருக்கின்ற பதவி நாட்டின் சட்ட திட்டங்களை அனுசரித்து வட்டி கணக்குகளை பார்க்க வேண்டி இருக்கின்றது. விருப்பமில்லாமல் இந்த வட்டி கணக்கை பார்த்து ஊரில் நன்மைக்காக வட்டி வீதத்தை உயர்த்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றேன். சபை என்று சொல்லுகின்ற போது தவிசாளர் மாத்திரமல்ல சகல உறுப்பினர்களுக்கும் சமனான பங்கு இருக்கின்றது. எந்த கட்சியை சேர்ந்தவராக இருந்தாலும் கௌரவ உறுப்பினராக இந்த சபைக்கு வருகின்ற போது சபையில் என்ன நடைபெறுகின்றது என்பதை அறிந்து கொள்ள வேண்டிய உரிமை உங்கள் எல்லோருக்கும் இருக்கின்றது. அந்த வகையில் தான் இந்த கணக்கறிக்கையை உங்கள் முன் நான் சமர்ப்பிக்கின்றேன். இன்ஷா அல்லாஹ் இறைவன் நாடி எங்களுடைய சபையின் காலம் முடிவடைவதற்கு முதல் முடியுமாயின் எதிர்கால நடவடிக்கைக்காக நிலையான வைப்பில் சில முதலீடுகளையும் செய்வதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கின்றேன் என்பதை கூறிக் கொள்கின்றேன்.

கௌரவ முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அவர்கள் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் பிரதேச அபிவிருத்தி கூட்டங்கள் சம்மாந்துறையிலே நடைபெறவில்லை. முதன்முறையாக கௌரவ அதிமேதகு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் பதவிக்கு அமர்த்தப்பட்டதன் பின்னர் சம்மாந்துறை பிரதேச அபிவிருத்தி குழு தலைவராக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா அவர்களின் தலைமையிலே எதிர்வரும் 14 ஆம் திகதி முதலாவது கூட்டம் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் நடைபெறப்போகின்றது என்ற செய்தியை கூறிக்கொண்டு,

எங்களுக்கு வளத்தாப்பிட்டியிலே பிரதேச செயலாளரினால் குறித்தொதுக்கப்பட்ட நான்கு ஏக்கர் வயல் நிலங்கள். இரண்டு துண்டுகளாக இரண்டு ஏக்கர் இரண்டு ஏக்கர் கவனிக்கப்படாமல் பிறரின் அத்துமீறலுக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கின்றது. இன்ஷா அல்லாஹ் 14ஆம் திகதி நடைபெற இருக்கின்ற பிரதேச அபிவிருத்தி குழு கூட்டதிலே அந்த விடயத்தை கதைத்து சபையின் சொத்துக்களை பாதுகாப்பதற்கு முயற்சி செய்வேன் என்று கூறிக் கொள்கின்றேன்.

அடுத்ததாக சபைக்குரிய மனுக்கள் கடிதங்கள் முறைப்பாடுகள் பரிசீலித்தல். பழைய அலுவலகக் கட்டிடத்தினை 01.04.2023 தொடக்கம் 31.03.2024 வரையிலான காலப்பகுதிக்கு வாடகைக்கு வழங்குதல். அதற்கு எவ்வளவு வாடகையாக அறவீடு செய்ய வேண்டும் என்பதை நாங்கள் தீர்மானிக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அதன் தற்போதய வாடகை எவ்வளவு?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ரூபா 15,000.00

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 25,000.00 அறவீடு செய்யலாம் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.நஜீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 25,000.00 அதிகமான தொகை என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.நபீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நில அளவை திணைக்களத்திற்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டதை கூட்டுவது என்றால் நில அளவை திணைக்களத்திற்கும் பிரதேச சபைக்கும் இடையில் உள்ள புரிந்துணர்வோடுதான் கூட்டலாம். அது ஒரு அரசாங்க திணைக்களம். ஆகையால் அரசாங்கத்தினால் ஒரு விலைமதிப்பு இருக்கும். அதை அறிந்து சமரசமான தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சாதாரண வீட்டை சாதாரண மக்களுக்கு வாடகைக்கு கொடுப்பது என்றால் கூடுதலான வாடகை வரும். இருந்தாலும் இது எமது ஊருக்கு தேவையான ஒன்று என்ற படியினால் 5000.00 ரூபா மேலதிகமாக கூட்டிக் கேட்பதற்குரிய சிபார்சை செய்யலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நில அளவை திணைக்களம் எமது காரியாலயத்தை வாடகைக்கு பெற்றிருப்பதால் எமது ஊரின் சொத்தாக இருக்கின்றது. எந்த சந்தர்ப்பத்திலும் வாடகை காரணமாக இந்த ஊரை விட்டு அந்த அலுவலகம் வேறு ஒரு இடத்திற்கு நகர்த்தப்படாமல் இருப்பதன் மூலம்தான் இந்த ஊரின் வளம் பாதுகாக்கப்படுகின்றது. திணைக்களமாக அது இருப்பதனால் திணைக்கள சட்டதிட்டங்களுக்கமைய அவர்களோடு சமரச உடன்பாட்டின் மூலமும் செல்லாமல் இருக்கும்படி வாடகையை தீர்மானிக்கும் படி கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எச்.எம்.காலித் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இது ஒரு திணைக்களம் என்பதனால் வாடகையை கொடுப்பதற்கான நிதி அந்த திணைக்களத்திடம் இருக்கும். இது தனிநபர் இல்லை என்பதனாலும் சபைக்கு வருமானம் தேவை என்பதாலும் அதிகரித்து கேட்கலாம் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இன்ஷா அல்லாஹ் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி சபைக்கு இயலுமான அளவு கூடுதலாக பெறுவதற்கு முயற்சி செய்வோம்.

**தீர்மானம் - 04/60/01**

பழைய அலுவலகக் கட்டிடத்தினை நில அளவைத் திணைக்களத்திற்கு 2023.04.01 – 2024.03.31 வரை மாதாந்தம் ரூபா 25,000.00 இற்கு வாடகைக்கு வழங்குவதற்கான தீர்மானம்.

| | | | |
|---|---|---|---|
| பிரேரித்தவர் | : | கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : | கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கல்லறிச்சல் - 02 கைகாட்டிச் சந்தியில் அமைந்துள்ள பழைய மடுவத்தில் சிரேஸ்ட பிரஜைகளுக்கான பொழுது போக்கு இடம் அமைத்தல். அண்மையிலே அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட சுற்றுநிருபத்திற்கு அமைய சிரேஷ்ட பிரஜைகளுக்கு பொழுது போக்குக்காக ஒரு இடம் தேவை என்றும் அதற்கான சில ஆலோசனைகளை கேட்டிருந்தார்கள். அந்த வகையிலே இதனை சிபாரிசு செய்திருக்கின்றோம் இது சம்பந்தமாக ஏதாவது கௌரவ உறுப்பினர்கள் கருத்து கூற விரும்பினால் கூறலாம்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கூறப்பட்டுள்ள பழைய மடுவ கட்டிடம் அந்தப் பகுதியில் தற்போது போதை பொருட்கள் தலைவிரித்தாடுகின்றது. அதனை பொழுதுபோக்கு இடமாக மாற்றினால் இதைவிட அதிகமாக போதை பொருள் பாவனை அதிகமாக விநியோகம் செய்யக்கூடிய இடமாக மாறிவிடும். அத்தோடு கடந்த காலங்களில் எங்களுடைய அந்த பிரதேசத்தில் கல்லறிச்சல் நூலகம் first Floor இல் இருப்பதனால் வாசகர்கள் அங்கு போவதற்கு கடினமான நிலையாக தென்பட்டது. அதை கடந்த காலங்களில் உரையாடி அந்த நூலகத்தை அங்கு இடமாற்ற வேண்டும் அந்த இடத்தில் பல்தேவை கட்டிடம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று எல்லோரும் திட்டமிட்டு இருந்த நிலையில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணத்தினால் அந்த வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளது. எனவே அதை பொழுது போக்கு இடமாக மாற்றினால் மீண்டும் அதற்கு பிறகு ஒரு பல் தேவை கட்டிடம் செய்வதற்கு அந்தப் பிரதேசத்தில் அரச காணிகள் எதுவும் இல்லை. எனவே அதை பல் தேவை கட்டிடம் செய்யக்கூடிய வாய்ப்புகள் இருந்தால் அதற்குரிய முயற்சிகளை செய்யுமாறு விணயமாக கேட்டுக் கொள்வதோடு, பொழுதுபோக்கு இடம் என்ற விடயத்தை கைவிட வேண்டும் என்று தாழ்மையாக கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அங்கு கல்லறிச்சல் மற்றும் ஏத்தாளக்குள பாடசாலை இருப்பதனால் அந்த நூலகம் தொடர்ந்து இயங்க வேண்டும். அதற்கு பக்கத்திலும் Bio Gas செய்த இடமும் வெறுமனே இருக்கின்றது. முதலாவது நிலத்தை பாதுகாக்க வேண்டும். அதற்கு பக்கத்தில் இருப்பவர் ஒருவகையாக அதனை எடுத்து அதற்குள் மரம் நாட்டி இருக்கின்றார். நாம் ஒரு நூலகத்திற்கு வாடகை கொடுக்கின்றோம். அதற்கு பக்கத்தில் பிரதேச சபைக்கு சொந்தமான வளவு தற்போது கோடிக்கணக்கு பெறுமதி வாய்ந்த வளவு பராமரிப்பு இல்லாமல் வேறு ஒரு ஆக்கிரமிப்பில் இருக்கின்றது. இந்த ஊருக்கு சொந்தமான சொத்து. அறிவு வளர்ச்சிக்கு தான் கொண்டு செல்ல வேண்டும். அதற்குள் அவர்களுக்கு வேண்டிய வசதிகளை எதிர்காலத்தில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். சம்மாந்துறையில் ஒலிம்பியாட் சித்தியடைந்த பிள்ளை அந்த பாடசாலையில் தான் கல்வி கற்கின்றது. நான் நினைக்கின்றேன் இந்த முறை பல்கலைக்கழகங்களுக்கு செல்லக்கூடிய அளவுக்கு மாணவர்கள் உருவாகிக்கொண்டிருக்கின்றார்கள். நாங்கள் கட்டாயம் அப் பிரதேசத்தில் இருப்பவர்களுக்கு சில புத்தகங்கள் வாங்க முடியாவிட்டாலும் பாடசாலை சம்பந்தமான புத்தகங்களை வழங்கி பொதுமக்களுக்கும் கவர்ச்சியான முறையில் வழங்கி அறிவு வளர்ச்சிக்கான பொழுதுபோக்கு இடமாகத்தான் மாற்ற வேண்டும். நமது ஊரை கல்வியில் வளர்ச்சியடைந்த ஊராகத்தான் மாற்ற வேண்டும். அஷ்ஹர் பாடசாலை, அல் அர்ஷத் பாடசாலை, தாறுஸ்ஸலாம் பாடசாலை போன்ற பாடசாலைகளில்தான் அதிகமான மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். இந்தப் பிரதேசத்தில் கல்விக்காக எப்படியான ஊக்கங்களை வழங்கின்றோமோ அதை செலுத்த வேண்டும். அந்தப் பிரதேசம் நிச்சயமாக முன்னேற வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த நிதியை பெற்றுக் கொள்வதற்காகத்தான் அந்த இடத்தை முன் வைத்திருக்கின்றோம். அதையே இந்த நோக்கத்திற்காக பயன்படுத்த வேண்டிய தேவை இல்லை. அரசாங்கத்தில் இருந்து கிடைக்கும் நிதியைப் பெற்று அந்த கட்டடத்தை புணரமைத்ததன் பின்னர் நாங்கள் தீர்மானிக்கலாம் நூலகத்தை எங்கு வைக்கலாம். பொழுதுபோக்கு இடத்தை எங்கு வைக்கலாம் என்று, நாம் இடம் தேடிவிட்டு உரிய நேரத்திற்கு இதை சமர்ப்பிக்க விட்டால் இந்த நிதியை பெற்றுக் கொள்ள இயலாமல் போகும் என்பதற்காகத்தான் அந்த கட்டிடத்தை பிரேரித்திருக்கின்றோம். நிதி கிடைத்த பின்னர் புணரமைத்துவிட்டு கௌரவ உறுப்பினர் அஸ்பர் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் கூறியது போன்று எந்த இடத்தில் எதை வைப்பது என்பதை தீர்மானிக்கலாம். நிதியைப் பெற்றுக் கொள்வதற்காகத்தான் அந்த கட்டிடத்தை சுட்டிக்காட்டி இருக்கின்றோம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த நிதி மூலம் பொழுதுபோக்குத்தளமாக மாற்றக்கூடிய இடமாக இருந்தால் பழைய மடுவம் உண்மையாக பொது நூலகத்திற்கு பொருத்தமான இடம் 3 பின்தங்கிய கிராம சேவகர் பிரிவுகளை கொண்ட இடம். மிகவும் வறுமை கோட்டிற்கு கீழ் வாழ்கின்ற மாணவர்கள் கல்வி கற்கின்ற பிரதேசம். அவர்களுடைய கல்வி தற்போது மேலோங்கிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் தங்களுக்கு தேவையான புத்தகங்கள் ஏனையவைகளை பணம் கொடுத்து பெற்றுக் கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே அந்த இடம் ஒரு பொது நூலகமாக மாற்றப்பட வேண்டும் என்று இதற்கு முதல் 3, 4 சபைகளிலே தீர்மானத்தை எடுத்து நிதிகளை பெற்று, ஒரு தடவை 2018 ஆம் ஆண்டு நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வளங்கள் அமைச்சினால் ஒவ்வொரு கௌரவ உறுப்பினர்களுக்கும் ஒதுக்கப்பட்ட இரண்டு மில்லியன் பணத்திலே அந்த இடத்தில் பொது நூலகத்தை அமைக்க வேண்டும் என்று நாங்கள் இந்த சபையில் முடிவு செய்த போது அந்த இடத்தில் இருக்கின்ற கட்டிடம் ஒரு NGO மூலம் கட்டப்பட்ட கட்டடம் என்று அதை உடைக்க முடியாது, திருத்த முடியாது என்ற யோசனை கௌரவத் தவிசாளர் அவர்களால் முன்வைக்கப்பட்ட போது அந்த முயற்சி கைவிடப்பட்டது.

ஆகவே நாங்கள் கடந்த காலங்களில் எங்களது முஹல்லா மஹல்லா மையவாடி வளாகத்தில் ஒரு பொழுதுபோக்கு தளமாக மாற்ற வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டோம். இன்று அந்த இடமும் பல்வேறுபட்ட நாசஹார செயல்களுக்கு சொந்தக்கார இடமாக பெறுமதியான இடத்தை மதிக்காமல் இவ் ஊரிலே உள்ள இளைஞர்கள் அந்த இடத்தை நாசமாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறான ஒரு திட்டம் இருக்குமாக இருந்தால் முஹல்லா மஹல்லா மையவாடி வளாகத்திலே மலை பிரதேசத்தை சார்ந்த பகுதிகளில் பொழுது போக்கு இடமாக மாற்றுவதற்கு இந்த சபையின் ஊடாக முயற்சி எடுத்தால் நல்லது என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வந்த சுற்றுநிருபத்திற்கமைய பள்ளிவாசலகளில் இதை கட்டுவதற்கு அரசாங்கம் அனுமதிக்க மாட்டாது. சபையின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்ற கட்டிடங்களை புனர்நிர்மானம் செய்வதற்காகத்தான் இதை கொடுத்திருக்கின்றோம். நிர்மானம் செய்ததன் பின்னர் தீர்மானிப்போம் எதை எந்த இடத்தில் வைப்பது என்று,

**தீர்மானம் - 04/60/02**
கல்லறிச்சல் - 02 கைகாட்டிச் சந்தியில் அமைந்துள்ள பழைய மடுவத்தில் சிரேஸ்ட பிரஜைகளுக்கான பொழுது போக்கு இடம் அமைப்பதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.நபீல் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஹிஜ்ரா புரத்தில் வதியும் சுமார் 20 குடும்பங்களுக்கு வாரத்தில் ஒரு முறை குடிநீர் வழங்குதல். உண்மையிலே இதை தயாரிக்கும் போது 20 குடும்பங்கள் என்று குறிப்பிட்டிருக்கின்றோம். நேற்று அங்கு நேரடியாக கள விஜயம் மேற்கொண்ட போது 28 குடும்பங்கள் நிரந்தரமாக குடியிருக்கின்றார்கள். அந்த கிராமம் மீள்குடியேற்றப்பட வேண்டிய ஒரு கிராமம். அங்கே பாடசாலை பள்ளிவாசல்கள் என்பன இருந்து நாட்டிலே ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக அங்கிருந்து இடம்பெயர்ந்து மக்கள் வெளியேறி விட்டார்கள். தற்போது அக்கிராமத்திலே படிப்படியாக குடியேறிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு தேவையான குடிநீர் வசதிகளை செய்வதற்கு நேற்று கௌரவ உறுப்பினர் மீரா முகைடீன் அவர்களுடன் நீர் வழங்கல் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளை அங்கு அழைத்துச் சென்று அதற்குரிய வேலைகளை ஆரம்பிப்பதாக உறுதியளித்து இருக்கின்றார்கள். அத்திட்டங்கள் கைகூடும் வரை அங்கே இருக்கின்ற மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்க வேண்டி இருப்பதனால் முக்கியமான இடங்களில் தண்ணீர் தாங்கிகள் வைத்து வாரத்தில் ஒரு முறை அல்லது இருமுறையாவது குடிநீர் வழங்க வேண்டி இருக்கின்றது இது சம்பந்தமாக கௌரவ உறுப்பினர்களின் ஆலோசனைகளை கேட்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் பீ.எம். மீரா முகைடீன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் கூறியது போன்று அந்தப் பிரதேசம் மிகச் செழிப்பாக காணப்பட்ட பிரதேசம். வன்செயல் காரணமாக அந்த மக்கள் இடம்பெயர்ந்திருக்கின்றார்கள். சம்மாந்துரையிலே 51 கிராம சேவகர் பிரிவுகளில் 02 கிராம சேவகர் பிரிவுகள் மாத்திரம் தான் இடம்பெயர்ந்த கிராமங்களாக அடையாளப்படுத்தப்பட்டது. மல்வத்தை – 01 கிராம சேவகர் பிரிவில் உள்ள ஹிஜ்ராபுரம் சம்பூரணமாக இடம்பெயர்ந்தது. அந்த மக்களுக்கான அதிகமான உதவிகள் அரசாங்கம் மேற்கொண்டு வீடுகள், மலசல கூடம் போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தாலும் நீர் வசதிகளை ஒருவரும் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. கடந்த கோடை காலங்களில் நான் எனது வாகனத்தில் தாங்கியில் தண்ணீர் ஏற்றிக்கொண்டு கொடுத்த வரலாறும் இருக்கின்றது. அந்த அடிப்படையிலே எனக்கு கிடைத்த வாய்ப்பை வைத்து நேற்று செய்த விஜயத்தின் அடிப்படையில் கிட்டத்தட்ட 50, 60 குடும்பத்திற்கு மேல் இருக்கின்றார்கள். தற்போது குடியிருப்பாளர்கள் 40 குடும்பத்திற்கு மேலும் 06 அரிசி ஆலைகளும் ஒரு கிரசர் நிலையமும், பள்ளிவாசலும் இருக்கின்றது. ஆகவே எங்களது சபை உறுப்பினர்கள் எல்லோரும் ஒத்துழைத்து வருகின்ற கோடை காலம் வேளாண்மை வெட்டி முடிந்தவுடன் அங்கு செல்ல இயலாத நிலை அனல் காற்று வீசும். மீண்டும் அந்த பிரதேசம் செழிப்பாக இயங்குவதற்கு நாங்கள் எங்களால் உதவிகளை வழங்கி குடிநீர் பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டும் என்று கூறிக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.நபீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீர் வழங்குவதோடு அந்த ஊரில் யானை பிரச்சினை பாரிய பிரச்சினையாக இருக்கின்றது. சில இடங்களில் மின் விளக்குகள் இல்லாமல் இருக்கின்றது. அவைகளுக்கு புதிதாக மின் விளக்குகளை பொருத்தி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**தீர்மானம் - 04/60/03**
ஹிஜ்ரா புரத்தில் வதியும் சுமார் 20 குடும்பங்களுக்கு அவர்களின் தேவைக்கேற்ப முக்கியமான இடங்களில் நீர்த்தாங்கிகளை வைத்து வாரத்தில் ஒரு முறை அல்லது இரண்டு முறை குடிநீர் வழங்குவதற்கும், நீர்த் தாங்கிகள் கொள்வனவு செய்வதற்கும் மற்றும் அப் பகுதியில் மின்விளக்குகள் பொருத்துவதற்குமான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | பீ.எம்.மீரா முகைடீன் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் - 04/60/04**

அலுவலக கணனி மற்றும் Network, CCTV கமரா என்பவற்றினை அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை திருத்த வருடாந்த ஒப்பந்தம் செய்வதற்கான தீர்மானம்.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் - 04/60/05**

LL – 7328 இலக்க வாகனத்திற்கு 02 மின்கலங்கள் கொள்வனவு செய்வதற்கான தீர்மானம்.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.ஏ.சீ.எம்.நிசாம்

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் - 04/60/06**

LH – 9953 இலக்க வாகனத்திற்கு ஒரு மின்கலம் கொள்வனவு செய்வதற்கான தீர்மானம்.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ்

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் - 04/60/07**

LE – 7441 இலக்க வாகனத்திற்கு ஒரு மின்கலம் கொள்வனவு செய்வதற்கான தீர்மானம்.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எம்.ஏ.தம்பிக்கண்டு

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

டிசம்பர் ஜனவரி மாத செலவறிக்கையில் சில விளக்கங்கள் தேவை என்று கடந்த சபையிலே ஒரு குழுவை அமைத்திருந்தோம். அந்த குழுவினுடைய அறிக்கை கிடைத்திருக்கின்றது. அந்த அறிக்கையின் பிரகாரம் மூன்று விடயங்களை அவர்கள் சிபாரிசு செய்திருக்கின்றார்கள். முதலாவது உரிய மாதத்தில் கொடுப்பனவுகளை வழங்காமல் தாமதம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் தாமதத்திற்கான காரணத்தை குறிப்பிட்டு சபைக்கு அறிக்கை இடவேண்டும். உதாரணமாக ULM முகைடீன் நூலகத்திற்கு மாத வாடகை 10,000 ரூபா. ஆனால் ஆறு மாதத்திற்கரிய வாடகையை ஒரே தடவையில் செலுத்தி இருக்கின்றார்கள். இவ்வாறு மாதா மாதம் செலுத்த வேண்டிய சில செலவுகளை வருட இறுதியிலே ஒன்றாக சேர்த்து செலுத்தியதனால் தான் இரண்டு கோடி ரூபா செலவு என்று வந்திருக்கின்றது. பார்க்கின்ற எல்லோருக்கும் ஒரு மாதத்திலே 2 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு இருக்கின்றது என்ற ஒரு தோரணையைத் தரும்.

எனவே இந்த குழுவின் சிபாரிசு உரிய மாதத்தில் அந்தந்த கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும். அப்படி வழங்கப்படாத சந்தர்ப்பத்தில் தாமதத்திற்கான காரணத்தினை அடுத்த சபை அமர்வுக்கு சமர்ப்பிக்க வேண்டும். அடுத்ததாக குறைபாடுகள் காணப்படுகின்ற கொடுப்பனவுகள் தொடர்பில் அதனுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களிடம் குறைபாடுகளை சீர் செய்ய வேண்டும் என்பதை தவிசாளர் என்ற ரீதியிலே இதற்கு பின்னர் அவர்கள் எவ்வாறு கோவைகளை சீராக செய்ய வேண்டும் என்று ஆலோசனை செய்ய வேண்டி இருக்கின்றது. மூன்றாவதாக சபையினால் நேரடியாக மேற்கொள்ளப்பட்ட பாதைகள் வடிகான்கள் திருத்தத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்ட உள்ளீடுகள் தவிர்த்து மீதி உள்ளீடுகள் சபையில் ஒப்படைக்கப்பட வேண்டும். உரிய நேரத்தில் ஒப்படைக்க தவறிய 06 சீமெண்ட் பக்கெட்டுகள் சபைக்கு மீள சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று இந்த குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. எனவே 06 சீமெண்ட் பக்கெட்டிற்குரிய பெறுமதி அல்லது அந்த சீமெண்ட் பக்கெட்டுகளை சபைக்கு பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதோடு டிசம்பர் ஜனவரி மாத செலவுகளை சபை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கின்றேன்.

### தீர்மானம் - 04/60/08

கடந்த மாதம் 2022.12.01 தொடக்கம் 2022.12.31 வரையிலான மற்றும் 2023.01.01. தொடக்கம் 2023.01.31 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### தீர்மானம் - 04/60/09

சபையினால் நேரடியாக மேற்கொள்ளப்பட்ட பாதைகள், வடிகான்கள் திருத்தத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்ட உள்ளீடுகள் தவிர்ந்த மீதி உள்ளீடுகள் சபையில் ஒப்படைக்க வேண்டும். உரிய நேரத்தில் ஒப்படைக்கத் தவறிய 06 சீமெண்ட் பக்கட்கள் அல்லது அதற்கான பெறுமதியினை சபைக்கு மீளளிக்க வேண்டும் என்பதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

தெரு விளக்குகள் திருத்தம் செய்வதற்காக இரு குழுக்களாக மின் ஊழியர்கள் பயன்படுத்த தற்போது ஒரே ஒரு ஏணி மாத்திரம் உள்ளது. இதற்கமைய ஏணி மற்றும் Belt என்பன கொள்வனவு செய்தல். நான் ஏற்கனவே கூறியது போன்று அறுவடை முடிவடைந்ததன் பின்னர் யானைத் தொல்லை அதிகரிப்பதனாலும் கடந்த நான்கு மாதங்களாக பழுதான மின்விளக்குகளுக்கு புதிதான மின் விளக்குகள் கொள்வனவு செய்யப்படாமலும் இருந்த நெரிசலை தவிர்ப்பதற்காக சகோதர சபையான இறக்காமம் பிரதேச சபையில் இருந்தும் இலங்கை மின்சார சபையிலே இருந்தும் உதவிகளை பெற்று தான் இதுவரையில் நாங்கள் பழுதான மின் விளக்குகளை மாற்றிக் கொண்டிருக்கின்றோம். ஒரே நேரத்தில் எல்லா இடத்தில் இருந்தும் கோரிக்கை வருகின்ற படியினால் சபையில் இருக்கின்ற ஏணி மற்றும் Belt போதாமல் இருக்கின்ற படியினால் மேலதிகமாக ஒரு ஏணியும் வாங்குவதற்காக சபையின் அனுமதியினை கோருகின்றேன்.

**தீர்மானம் - 04/60/10**

தெரு விளக்குகள் திருத்தம் செய்வதற்காக இரு குழுக்களாக செல்லும் மின் ஊழியர்கள் பயன்படுத்த தற்போது ஒரே ஒரு ஏணி மாத்திரம் உண்டு. இதற்கமைய ஏணி மற்றும் Belt என்பன கொள்வனவு செய்வதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்பர் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் - 04/60/11**

அல் - அர்ஷத் பாடசாலைக்கு குப்பை தொட்டிகள் கொள்வனவு செய்து வழங்குவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

Renovation of concrete surface Drainage at S – 24 Channel cross lane malayadikiramam – 04 இந்த வேலையை செயற்படுத்துவதற்கு உங்களது அங்கீகாரத்தை கேட்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த மாத கூட்டத்தில் உங்களிடம் விணயமாக வேண்டிக் கொண்டது, டிசம்பர் மாதம் எடுக்கப்பட்ட தீர்மானங்களை உள்வாங்கி அவைகளை செய்வதற்குரிய ஏற்பாடுகளை செய்து விட்டு ஏனைய வேலைகளை தயவு செய்து செய்யுங்கள் என்று விணயமாக கேட்டிருந்தேன். ஆனால் கடந்த மாதம் எட்டு வேலை திட்டங்களுக்கு அனுமதி தந்திருந்தோம். அதில் டிசம்பர் மாதம் எடுக்கப்பட்ட தீர்மானத்தில் இரண்டு வேலைகள் உள்வாங்கப்பட்டிருக்கின்றது. அதை ஏற்றுக் கொள்கின்றேன். தற்போது கொண்டு வந்ததும் டிசம்பர் மாதம் எடுக்கப்பட்ட தீர்மானத்தில் அந்த வேலை எடுக்கப்பட்டிருக்கின்றது. நீங்கள் கௌரவ உறுப்பினராக இருந்த நேரத்தில் அது தீர்மானமாக எடுக்கப்பட்டிருக்கின்றது.

நான் விளங்காமல் ஒரு விடயத்தை கேட்கின்றேன் என்னவென்றால் டிசம்பர் மாத எடுக்கப்பட்ட தீர்மானத்தை தாங்கள் தவிசாளராக வந்ததற்குப் பின்னர் மீண்டும் இந்த சபையில் இந்த தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டுமா? இல்லையா? இதுதான் என்னுடைய கேள்வி. ஒரே ஒரு தவிசாளர் மாத்திரம்தான் இந்த சபையை விட்டு வெளியேறி இருக்கின்றார். தற்போது தவிசாளராக இருக்கின்ற ஐ.எல்.எம் மாஹிர் அவர்கள் கௌரவ உறுப்பினராக இருந்த காலத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் டிசம்பர் மாதத்தில். அந்த தீர்மானத்தை மீண்டும் தவிசாளராக ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள் அந்த ஆசனத்தில் இருக்கும் போது அந்த தீர்மானம் எடுக்கப்பட வேண்டுமா? டிசம்பர் மாதம் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் 14 வேலைகள் செய்யப்படாமல் இருக்கின்றது. 08 வேலைகளுக்குரிய அங்கீகாரம் கேட்ட போது நாங்கள் அங்கீகாரம் கொடுத்து விட்டோம். டிசம்பர் மாதம் எடுக்கப்பட்ட தீர்மானங்களை முதலில் செய்யுங்கள். அதன் பின்னர் சபையின் நிதி நிலைமைகளை பார்த்து இதற்கு பின்னர் வருகின்ற வேலைகளை செய்யுங்கள் என்று, நான் அதிலே சுட்டிக்காட்டப்பட்டு பேசிய விடயம் என்னவென்றால் S வாய்க்கால் மற்றும் 29 வாய்க்கால் துப்பரவு செய்தல்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் அவர்களே, உங்களது விடயத்தை ஏனைய விடய நேரத்தில் பேசுங்கள். தற்போது உங்களிடம் கேட்டுக் கொள்வது என்னவென்றால் டிசம்பர் மாதம் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் எல்லாவற்றையும் நிறைவேற்ற வேண்டும் என்ற ஒரு கடப்பாடு இந்த சபைக்கு இல்லை. நிதி நிலைமையையும் அனுசரித்து முன்னுரிமை அடிப்படையில், கூடுதலாக மக்களுக்கு பிரயோசனம் கிடைக்கக்கூடிய வேலைகளுக்கு தான் முக்கியத்துவம் கொடுக்கின்றோம். அந்த வகையில் இதற்கு முன்னர் எடுத்த தீர்மானத்தை திரும்ப எடுப்பதில் எந்த தவறும் இல்லை. டிசம்பர் மாதம் எடுக்கப்பட்ட தீர்மானத்தை மீண்டும் இரண்டாம் மாதம் எடுக்க இயலாது என்ற சட்டம் இல்லை. அந்த வேலைக்கு அவ்வளவு முக்கியத்துவம் இருக்கின்றது என்பதுதான் அதன் அர்த்தம். வேறு விடயங்களில் உங்களுடைய ஏனைய கருத்துக்களை கூறுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**தீர்மானம் - 04/60/12**
கீழ்வரும் வேலையை செயற்படுத்துவதற்கான தீர்மானம்.

I. Renovation of Concrete surface Drainage at S-24 Channel cross lane, Malayadikiramam – 04, Sammanthurai.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம்.ஜிப்ரி |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
Visionary Social Service Organization சபைக்கு ஒரு கடிதம் ஒன்று அனுப்பி இருக்கின்றார்கள். எமது அமைப்பானது தற்போதுள்ள பொருளாதார சூழ்நிலையை கருத்தில் கொண்டு எமது பாடசாலை செல்லும் மாணவர்களின் பெற்றோர்கள் அப்பியாசக் கொப்பிகள் மற்றும் காகிதாதிகள் கொள்வனவின் போது எதிர்நோக்கும் பொருளாதார சுமையை சற்று குறைக்கும் முகமாக பிரபல அப்பியாசக் கொப்பிகள் மற்றும் காகிதாதிகள் உற்பத்தி நிறுவனத்துடன் கலந்துரையாடி சம்மாந்துறை மக்களுக்காக குறைந்த விலையிலான விற்பனை சந்தையொன்றை நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளது. மேற்படி நிகழ்வானது அப்துல் மஜீட் மண்டபத்தில் 11, 12, 13 மார்ச் 2023 ஆம் திகதி நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த நன்நோக்கத்திற்காக தங்களது ஆளுகையில் உள்ள அப்துல் மஜீட் மண்டபத்தினை மேற்படி நிகழ்வுக்காக குறைந்த வாடகையில் தந்து உதவி மக்களின் பொருளாதார சுமையை குறைப்பதற்கு உதவுமாறு பணிவாய் வேண்டுகிறோம் என்று ஒரு வேண்டுகோளை சபைக்கு முன்வைத்திருக்கின்றார்கள்.

இந்த இடத்திலே ஒரு செய்தியை குறிப்பிட வேண்டும். சதோச நிறுவனத்தில் பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்கள் கொப்பிகள் மற்றும் ஏனைய உபகரணங்கள் 30% விலை கழிவிலே விற்கப்படுகின்றது. துரதிஷ்டவசமான சம்பவம் என்னவென்றால் சம்மாந்துறையில் மாத்திரமல்ல கிழக்கு மாகாணத்திலே கிட்டத்தட்ட 15 சதோச நிறுவனங்கள் கௌரவ ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அவர்கள் பதவி ஏற்றதன் பின்னர் மூடப்பட்டிருக்கின்றது. இதனால் பாதிக்கப்படுவது இந்தப் பகுதியிலே இருக்கின்ற தமிழ் முஸ்லிம் மாணவர்களும், பெற்றோர்களும். எனவே இதிலே நாங்கள் ஒரு தீர்மானமாக நிறைவேற்றி அதனுடன் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்கு மூடப்பட்ட கிழக்கு மாகாணத்திலே இருக்கின்ற சதோச நிறுவனங்களை மீண்டும் திறந்து இந்த பொருளாதார கஷ்டமான சூழ்நிலையிலே இந்த அரசாங்கத்தின் விலைக் கழிவுகளை சாதாரண ஏழை மாணவர்கள் பயனடையும் முகமாக மீளத் திறந்து தருமாறு கேட்க வேண்டும். நிந்தவூரில் கிட்டத்தட்ட 15 வருடங்களாக இயங்கி வந்த சதோச நிறுவனத்தைக் கூட மூடி இருக்கின்றார்கள். சம்மாந்துரையிலும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சதோச நிறுவனங்களை மூடி இருக்கின்றார்கள். எனவே சென்னல் கிராமத்திலே இருந்து நகரத்திலே இருக்கின்ற சதோச நிறுவனங்களுக்கு வருவது என்றால் முச்சக்கர வண்டிக்கு 600 ரூபாய் செலவழிக்க வேண்டி

இருக்கின்றது. ஆகவே இந்த சபையிலே ஒரு தீர்மானம் ஒன்று எடுத்து எங்களது ஊர் மாத்திரம் அல்ல கௌரவ ஜனாதிபதி அவர்களின் ஆட்சி காலத்தில் மூடப்பட்ட அனைத்து சத்தோஷ நிறுவனங்களையும் மீள திறக்குமாறு உரிய அமைச்சருக்கு இந்த சபையினால் ஒரு கடிதம் ஒன்று அனுப்புவதோடு, சத்தோஷ நிறுவனங்களை அந்த நேரத்திலே ஆரம்பித்த கௌரவ உறுப்பினர் கௌரவ அமைச்சர் ரிஷாட் பதியுதீன் அவர்களுக்கும் நன்றி கூறிக்கொண்டு, இவர்களுக்கு நாங்கள் ஒரு சலுகை அடிப்படையில் 03 நாட்கள் கேட்டிருக்கின்றார்கள். எவ்வளவு வாடகையாக அறவீடு செய்ய வேண்டும் என்பதை இந்த சபை தீர்மானித்தால் நன்றாக இருக்கும்.

## தீர்மானம் - 04/60/13

கிழக்கு மாகாணத்தில் மூடப்பட்ட சதோச நிறுவனங்களை மீள திறப்பதற்காக உரிய அமைச்சிற்கு அறிவிப்பதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலவ்பா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, தற்போது கேட்கப்பட்டிருக்கின்ற விடயம் நல்ல நோக்கத்திற்காக கேட்டிருக்கின்றார்கள். மாணவர்களின் கல்விக்காக அப்பியாசக் கொப்பிகளின் விலைகள், பென்சில்கள், எல்லாவற்றின் விலைகளும் உயர்வடைந்து கொண்டு செல்கின்ற நேரத்தில் அன்றாடம் கூலி தொழில் செய்கின்ற பெற்றோர்களில் இருந்து பணக்காரர்கள் வரைக்கும் இது ஒரு சவாலான விடயமாக இருக்கின்றது. எங்களுடைய பிரதேச சபை அப்துல் மஜீட் மண்டபத்திற்கு ஒரு நாள் ஒன்றுக்கு எவ்வளவு வாடகை அறவீடு செய்கின்றார்கள்? அந்த வாடகையினை பொறுத்து அவர்கள் என்ன நோக்கத்திற்காக அந்த கட்டிடத்தை கேட்டிருக்கின்றார்கள் என்றால் அந்த பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்த வேண்டும் என்பதற்காக. அதற்கு இந்த சபையில் இருக்கின்ற கௌரவ உறுப்பினர்கள் கௌரவ தவிசாளர் நீங்கள் உட்பட ஒரு தீர்மானம் ஒன்று எடுத்து எவ்வளவு குறைந்த ஒரு வாடகை எங்களால் பெற்றுக்கொண்டு எங்களது சபைக்கும் பாதிப்பில்லாமல் எங்களது ஊர் மக்களுக்கும் பாதிப்பு இல்லாமல் செய்வதற்கு இடமளித்தால் நன்றாக இருக்கும் என்பதை நான் சபையில் கருத்தை முன்வைக்கின்றேன். எனது கருத்து ஒரு நாளைக்கு 10,000.00 ரூபா அறவீடு செய்யலாம் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, 50% குறைப்பது நல்லது என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.ஏ. தம்பிக்கண்டு அவர்கள்:**

ஒரு நாளைக்கு நிலையான செலவு எவ்வளவு ஏற்படுகிறது என்பதை அறிந்து அதிலிருந்து சற்று கூடுதலான ஒரு தொகையை தீர்மானித்தல் நன்றாக இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர் பலருடைய ஆலோசனைகளின் படி அப்துல் மஜீட் மண்டபத்திலே மூன்று நாட்கள் புத்தகங்கள் விற்பனை செய்வதற்குரிய கட்டணத்தை குறைத்து 10,000.00 ரூபாவாக கொடுப்பதற்கு சபை தீர்மானம் எடுப்போம்.

## தீர்மானம் - 04/60/14

Visonary Social Service Organization அமைப்பானது 30% விலைக்கழிவுடன் அப்பியாசக் கொப்பிகள் மற்றும் ஏனைய பொருட்கள் விற்பனை செய்வதற்காக மண்டபத்தினை கோரியுள்ளார்கள். அதற்கமைய அப்துல் மஜீட் மண்டபத்திற்கு நாள் ஒன்றுக்கு 10,000.00 ரூபா அறவீடு செய்வதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எங்களது ஊரிலே இருக்கின்ற தொலைதொடர்பு கோபுரங்கள் சம்பந்தமாக, தற்போது வீரமுனையில் இருக்கின்ற தொலைத்தொடர்பு கோபுரத்தின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருக்கின்றது. அந்த கோபுரத்தை நடாத்துகின்ற நிறுவனம் கோபுரம் அமைந்துள்ள இடத்தின் சொந்தக்காரர்கள் ஆகியோர் சம்மதத்துடன் அந்த கோபுரத்தின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளதனால் கூடுதலான பாவனையாளர்களுக்கு இடைஞ்சலாக இருக்கின்றது. ஏற்கனவே சென்னல் கிராமத்திலே இருக்கின்ற மக்களுக்கு போதிய அளவு Coverage இல்லாத காரணத்தினால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற போது, அதற்கு மேலதிகமாக இந்த கோபுரமும் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றது. அவர்கள் பொருத்தமான இடத்தை தேடிக் கொண்டிருக்கின்றார்கள். அது சம்பந்தமாக கடந்த கூட்டத்திலே வந்த முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக உப தவிசாளர் அவர்களின் தலைமையில் ஒரு குழுவை அமைத்தோம்.

அவர்கள் தந்த அறிக்கையின் படி கடந்த 21.02.2023 ஆம் ஆண்டு சபையின் 04வது சபையின் 59வது அமர்வில் கௌரவ தவிசாளரினால் நியமிக்கப்பட்ட குழுவானது வழங்கப்பட்ட பணியானது வீரமுனையை அண்மித்த SLT நிறுவனத்தின் தொலைத் தொடர்பு கோபுரம் சம்பந்தமாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை நேரில் சென்று அயலவர்களையும் கோபுரத்தையும் அவதானித்தபோது அயலில் வசிக்கும் குடியிருப்பாளர்களுக்கு பல இடைஞ்சல்கள் தருவதாகவும் அசௌகரியங்கள் ஏற்படுவதாகவும் கூறுகின்றனர். இதனை அவதானிக்கின்ற போது இக்கோபுரத்தை உடன் அகற்றுமாறு கூறுகின்றனர். எனவே பொதுமக்களின் கருத்துக்களுக்கு முன்னுரிமை அளித்து தொலைத்தொடர்பு திணைக்களத்தின் தொழில்நுட்ப அறிக்கையைப் பெற்று சாதக, பாதக தன்மையை அறிந்து தீர்வினை பெற்றுக்கொள்ள சிபார்சு செய்கின்றோம்.

அதாவது தொலைத்தொடர்பு கோபுரம் இருக்கின்ற இடத்தின் சொந்தக்காரர்கள் அயலில் வசிக்கின்ற பொதுமக்கள் எல்லோரும் எழுத்து மூலம் கையொப்பம் இட்டு சொல்கின்றார்கள் இது எங்களுக்கு இருப்பதினால் பல அசௌகரியங்கள் ஏற்படுகின்றது என்று, ஏற்கனவே எங்களது ஊரை முழுமையாக Coverage செய்ய முடியாத நிலைமையில் நான் முன்னர் கூறியது போன்று சென்னல் கிராமம் உட்பட எனது வீட்டில் இருந்தும் தொலைபேசி அழைப்பு எடுப்பது மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. அந்த தொலைத்தொடர்பு கோபுரத்தை அங்கு இருந்து அகற்றுவதற்கு அனுமதி கொடுப்பதோடு, சபைக்கு ஒரு கடிதம் வந்திருக்கின்றது ஒன்பது மீட்டர் தொலை தொடர்பு கம்பம் பொருத்துவதற்கான முறையீடு, மேற்படி விடையம் தொடர்பாக 30.09.2022 ஆம் திகதி தன்னால் கௌரவ தவிசாளர் அவர்களுக்கு பிரதேச சபை செயலாளர் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் அடங்கலான இவ் உயர் சபையின் மேலான கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட முறைப்பாடு தொடர்பாக பிரதி இணைக்கப்பட்டுள்ளது. இவ்விடயத்திற்கு எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என பிரதேச சபை செயலாளர் அவர்களினால் 14.10.2022 ஆம் திகதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகையால் இத் தொலை தொடர்பு கம்பம் பொருத்துவதற்கு தேவையான அனுமதியினை வழங்குமாறு தங்களை தயவுடன் வேண்டிக் கொள்கின்றேன் என்று அம்பாரை 9ம் வீதியில் அமைந்துள்ள மர்சூக்கா என்பவர் கடிதம் அனுப்பியிருக்கின்றார். இதற்கு சபை ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறை பிரதேசத்தில் உயர் கல்வி கற்கும் மாணவர்கள் அதிகமாக காணப்படுகின்றார்கள். அவர்களுடைய அதிகமான கல்விகள் online மூலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதில் எனது மகனையும் எடுத்துக் கொள்ளலாம். ஏனென்றால்

Zoom இல் கல்வி கற்பதற்கு மூன்று கிழமையாக எந்த Signal உம் கிடைக்காமல் மிகவும் அவஸ்தை படுகின்றார்கள் இதை நீங்கள் கருத்தில் கொண்டு, அம்பாரை ஒன்பதாம் வீதியில் ஏற்கனவே தீர்மானம் எடுக்க வேண்டி இருந்தது. சபையில் இருக்கின்ற கௌரவ உறுப்பினர்கள் அதிகமானவர்கள் இது சம்பந்தமாக கதைத்திருக்கின்றார்கள். நாங்கள் அதற்கு அனுமதி கொடுக்கலாம் என்று கௌரவ உறுப்பினர்கள் கௌரவ தவிசாளர் அவர்களிடம் விணயமாக கேட்டுக்கொள்வதோடு, சென்னல் கிராமத்தில் இருக்கின்ற சந்தை வளவிலும் ஒரு தொலைத்தொடர்பு கோபுரம் நிர்ணயிக்கலாம் என்று நினைக்கின்றேன். இதை நீங்கள் உங்களது கவனத்திற்கு எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மர்சூக்கா என்பவரின் கட்டடத்திற்கு மேல் தொலைத்தொடர்பு கோபுரம் பொருத்துவது சம்பந்தமாக கடந்த காலங்களில் பல தடவைகள் பார்வையிட்டிருக்கின்றோம். அதற்கு ஒரு தீர்மானம் எடுத்து அதை செய்வதற்கு ஆவண செய்ய வேண்டும். சென்னல் கிராம சந்தை வளவிலும் அதை செய்வதற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்றது என்று நினைக்கின்றேன்.

**தீர்மானம் - 04/60/15**
அம்பாரை 9ம் வீதியில் அமைந்துள்ள மர்சூக்கா என்பவரின் கட்டிடத்தில் 9 மீட்டர் தொலைத்தொடர்பு கோபுரம் அமைப்பதற்கு அனுமதி வழங்குவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் அவர்களே, சந்தைக்கான இடம் இன்னும் சபைக்கு உரித்தளிக்கப்படவில்லை. இதுவரையில் பிரதேச செயலாளரின் கட்டுப்பாட்டில் தான் இருக்கின்றது. இன்ஷா அல்லாஹ் வருகின்ற 14 ஆம் திகதி நடைபெற இருக்கின்ற DCC Meeting இல் அதை ஒரு விடயமாக கதைப்பதற்காக வைத்திருக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
செயலாளர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். யூ.எல்.எம் முகைடீன் நூலகத்திற்காக அல் மர்ஜான் பாடசாலைக்கும் முன் இருக்கின்ற Cooperative வளவை நூலகத்தினை இடமாற்றுவதற்காக எங்களது பிரதேச சபைக்கு பாரம் தாருங்கள் என்று கேட்டு கடிதங்கள் அனுப்பியும், அதற்கு எந்த விதமான பதிலும் இல்லாமல் பிரதேச செயலாளர் வைத்துக் கொண்டிருக்கின்றார். அது சம்பந்தமாகவும் DCC Meeting இல் பேச வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அது பிரதேச செயலாளருக்குரிய இடம் இல்லை. Cooperative வளவு. அது சம்மந்தமாக கலந்துரையாடுவதற்கு கடிதம் மூலம் தொடர்பு கொண்டோம். அவர்கள் எங்களுக்கு அனுப்பிய பதில் அவர்கள் இயக்குனர் சபையுடன் சேர்ந்து தீர்மானித்ததன் பிறகு தான் தவிசாளருடன் கதைக்கலாமா இல்லையா என்பதை அறிவிப்பார்கள். இந்த விடயத்தையும் DCC Meeting இல் கதைப்போம்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அதேபோல் கடந்த காலங்களில் ஒரே ஒரு முறை தான் DCC Meeting இல் கலந்துகொண்டிருக்கின்றோம். ஏத்தாளக்குள பாடசாலைக்கு பின் இருக்கின்ற Cooperative வளவை அந்த பாடசாலைக்கு வழங்க வேண்டும் என்று நீங்களும் அதற்கு ஆதரவாக பேசியிருந்தீர்கள். அதையும் DCC Meeting இல் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.நபீல் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, அல் மர்ஜான் பாடசாலைக்கு முன் இருக்கின்ற வளவு Cooperative இற்கு சொந்தமான வளவுதான். அதற்கு லீசிங் அடிப்படையில் Trustee Board நடவடிக்கை எடுத்தோம். பொதுச் சபை கூடி பொதுச் சபை தீர்மானம் எடுத்து RCC இன் அனுமதியை கொண்டுதான் அதை பெறலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**

SP 19 மற்றும் SP 14 கூட்டுறவு கடைகள் எந்தவிதமான பராமரிப்பும் இல்லாமல் இருப்பதனால் இரண்டு கட்டிடங்களையும் சபை பராமரிப்பதற்கு ஒரு எழுத்து மூலம் கேட்டு, சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் இடம் பெற்ற முதலாவது அபிவிருத்தி கூட்டத்தில் இந்த விடயம் எத்தி வைக்கப்பட்டது. அதற்கு ஒரு முடிவு அல்லது தீர்மானம் எடுப்பதற்காக அடுத்தடுத்த அபிவிருத்தி கூட்டங்கள் நடைபெறவில்லை. அதுமட்டுமல்லாமல் சம்மாந்துறை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் பராமரிப்பில் இருக்கின்ற அதிகமான கட்டிடங்கள் வளர்த்தாப்பிட்டி, மல்வத்தை, மஜீட்புரம் போன்ற இடங்களில் எந்தவிதமான பாவனைக்கும் இல்லாமல் இந்த ஊரின் வளங்கள் நாசமாகிக் கொண்டிருக்கின்றது. ஆகவே இவைகளை இவர்களால் பராமரிக்க முடியாவிட்டால் சபையினால் பராமரிக்க முடியும் எத்தனையோ தேவைகளுக்காக அந்த கட்டிடங்களை பயன்படுத்த முடியும். நான் நினைக்கின்றேன் இறுதியாக நடைபெறுகின்ற பிரதேச அபிவிருத்தி கூட்டமாக இருந்தாலும் இந்த கூட்டத்தில் தாங்கள் சரியான ஒரு தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நண்பர்கள் நலன்புரி ஒன்றியம் வீரமுனை, வீரமுனையில் புதிதாக ஒரு சிறுவர் பூங்கா ஒன்று அமையப்பெற்றுக் கொண்டிருக்கின்றது. மிக விரைவில் அதை திறந்து வைக்க வேண்டும். அதை பார்வையிட சென்ற போது அங்கே ஒரு கருத்து ஒன்று பரிமாறப்பட்டது என்னவென்றால் நிழல் இல்லாத ஒரு பிரதேசமாக இருக்கின்றது. பூங்காவுக்கு விளையாடுவதற்கு பிள்ளைகளை அழைத்து வருகின்ற தாய்மார்கள் இழைப்பாருவதற்கு நிழல் தரக்கூடிய மரங்கள் இல்லாமல் இருக்கின்றது. நிழல் தரும் மரங்களை நாட்டி வளர்த்தால் பிரயோசனமாக இருக்கும் என்று கதைத்தோம். உதாரணமாக கைகாட்டி சிறுவர் பூங்கா, கல்லறைச்சல் சிறுவர் பூங்காவில் மரம் நாட்டி இருக்கின்ற மாதிரி அந்த சிறுவர் பூங்காவிலும் மரங்கள் நட வேண்டும். பொருத்தமான சில இடங்களை தெரிவு செய்து இருக்கின்றார்கள். அதற்கு சபையின் உதவியை கேட்டிருக்கின்றார்கள் மேற்படி எமது அமைப்பானது பல சமூக சேவைகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில் வீரமுனை சிறுவர் பூங்காவை திறப்பு விழாவை முன்னிட்டு எதிர்கால சந்ததிகளின் நலன் கருதி மரக்கன்றுகளை நடுவதாக எமது அமைப்பு தீர்மானித்துள்ளது. எனவே நடப்படுகின்ற மரக் கன்றுகளை பாதுகாப்பதற்காக பரல்கள் பெற்றுத் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். அதற்கு சபையின் அனுமதியை கேட்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, நிழல் தரக்கூடிய மரத்தோடு பயன் தரக்கூடிய கைகாட்டி சிறுவர் பூங்காவில் பலாமரம், ஈறப்பலா நாகமரம் போன்றவைகளை தெரிவு செய்து வைத்தோம். நான் நினைக்கின்றேன் LDSP திட்டத்தின் கீழ் மரம் நாட்டுவதற்குரிய பகுதி இருக்கின்றது என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

மதிப்பீட்டறிக்கையில் அது இருந்தால் சபையால் காசு செலவளிக்கத் தேவையில்லை. மதிப்பீட்டறிக்கையில் இல்லாவிட்டால் சபையால் பரல்களை கொள்வனவு செய்து வழங்க வேண்டும்.

**தீர்மானம் - 04/60/16**

வீரமுனை சிறுவர் பூங்காவில் நடப்படும் நிழல்தரும் மரங்களை பாதுகாப்பதற்காக பரல்கள் கொள்வனவு செய்து வழங்குவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வண்டு வாய்க்கால் சந்தியில் இருக்கின்ற பிரதேச சபைக்கு சொந்தமான கடையறையை வாடகைக்கு பெற்று தருமாறு ரசூல் என்பவர் கடிதம் தந்திருக்கின்றார். மூடி இருக்கின்ற கடையை என்ன செய்வது?

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அவர் எனக்கு தனிப்பட்ட முறையில் கதைத்தார். அனேகமாக ஹோட்டல் செய்வதற்காகத்தான் கேட்டிருக்கின்றார். இங்கு குறிப்பிடப்படவில்லை என்பது எனக்கு தெரியாத விடயம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஏற்கனவே 2 பேர் கோழிக்கடை செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார்கள். அதை இந்த சபை நிராகரித்துள்ளது. கோழிக்கடை தவிர்ந்து வேறு வியாபாரங்களுக்கு அனுமதி வழங்குவோம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கோழி இறைச்சிக் கடை, மாட்டிறைச்சிக் கடை இல்லாமல் ஏனைய தேவைகளுக்கு பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்குவோம். விலைமதிப்புத் திணைக்களத்தினால் ஒரு வரையறை இருக்கின்றது. அதனை கருத்திற் கொண்டு வாடகை வழங்குவதாக தீர்மானம் எடுப்போம்.

**தீர்மானம் - 04/60/17**
கொச்சிக்காய்தூளர் சந்தியில் அமைந்துள்ள சபைக்கு சொந்தமான கடையறையை இறைச்சிக்கடை, கோழிக்கடை தவிர்ந்த ஏனைய தேவைகளுக்கு வழங்குவதற்கு ஏலவே விலை மதீப்பீட்டு திணைக்கள வாடகைக்கு வழங்குவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம்.ஜிப்ரி |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தற்போது Online மூலமாக வீட்டில் இருந்து வியாபாரம் செய்கின்றார்கள். அவர்கள் அந்த வியாபாரத்தை செய்வதற்கு Business Registration ஒன்று தேவை. அதை இந்த சபையில் கேட்டால் இல்லை என்ற முறைப்பாடு வந்தது. ஆகவே Online மூலமாக வீட்டில் இருந்து வியாபாரம் செய்பவர்களுக்கு அனுமதியை சபை வழங்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இது விடயமாக Online இல் என்ன என்ன வியாபாரம் நடைபெறுகின்றது என்று தெரியாது. அதே போல் வெளிநாட்டில் இருக்கின்ற உறவினர்கள் கார்கோவில் சட்டத்திற்கு முரணாக சிகெரட், மஞ்சல், ஏலக்காய் போன்ற வியாபாரம் நடைபெறுகின்றது. அதற்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்குவதாக இருக்கக்கூடாது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, Online வியாபாரம் சம்மந்தமாக NGO இல் வேலை செய்கின்ற Director என்னுடன் தொடர்பு கொண்டார். அதிகமான பெண்கள் பெண் தலைமைத்துவத்தில் இருப்பவர்கள் வியாபாரங்களை Online மூலம் செய்வதனால் அவர்களுக்குரிய வியாபாரத்தை பதிவு செய்வதற்கு பிரதேச சபை அனுமதியை எடுத்துத் தாருங்கள் என்று கேட்டார்கள். குறித்த 40 பேருக்கு அனுமதியை பெற்றுத்தாருங்கள் என்று கேட்டிருந்தார்கள். பெரும்பானவர்கள், பெற்றோல் பிரச்சினை, போக்குவரத்து பிரச்சினை பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்குவதனால் Online மூலம் எல்லாப் பொருட்களை கொள்வனவு செய்கின்றார்கள். இதில் ஒரு விடயத்தை குறிப்பிட வேண்டும் என்னவென்றால் வெளியில் கடைகளை நடாத்துகின்ற வியாபாரிகள் கூட என்ன என்ன விற்கப்படுகின்றது என்று பட்டியலிட்டு காட்டுவதில்லை. ஆனால் Online இல் வியாபாரம் செய்பவர்கள் அழகான முறையில் காட்சிப்படுத்துகின்றார்கள். அவர்களுக்கு இந்த சபை மூலம் அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப்லெப்பை அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, Online வியாபாரம் என்பது தற்போது இலங்கையில் பல இடங்களிலும் இருந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதற்கு தபால் திணைக்களம் மிகுந்த பொறுப்பை கையிலெடுத்து செயற்படுகின்றது. அந்த அடிப்படையில் நான் தபால் திணைக்களத்தில் 38 வருட சேவையினை முடித்துக் கொண்டு சம்மாந்துறையில் பிரதம அஞ்சல் அதிபராக தற்போது கடமையாற்றிக் கொண்டிருக்கின்றேன். அந்த அடிப்படையில் எமது திணைக்களம் வருமானத்தை ஈட்டுவதுதான் எங்களது நோக்கம். அந்த அடிப்படையில் Online வியாபாரத்தை தபால் திணைக்களம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்பதற்காக பல செயற்திட்டங்களை முன்னெடுத்திருக்கின்றது. எல்லோரும் சம்மாந்துறையைப் பொருத்தமட்டில் ஒரு மகளிர் அமைப்பின் தலைவி எனக்கு தொலைபேசி அழைப்பில் சொன்னார் online உரிமையாளரோடு நான் பணம் அனுப்பி இருக்கின்றேன். இதுவரையிலே 60,000.00 ரூபா அனுப்பி இருக்கின்றேன். அந்த பணத்தை எவ்வாறு அறவீடு செய்யலாம் என்ற ஒரு யோசனையை கேட்டார். அப்படியான நிலைகளும் online வியாபாரம் மூலம் எமது ஊருக்கு வரவழைக்கின்ற அந்த நிலையில் எமது மகளிர்கள் கூடுதலாக செயற்படுகின்றார்கள். அவர்கள் அதை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

தேவையான பொருட்களை எமது வர்த்தக சந்தையில் பெற முடியாததால் இன்று உலகம் ஒரு தொழில்நுட்பத்தின் மூலமாக அபிவிருத்தியடைந்திருந்த படியினால் online வியாபாரம் நடைபெறுகின்றது. இந்த விடயத்தில் தேவையானவர்கள் வீட்டில் இருந்து பெற்றுக் கொள்ளலாம். அதில் தடைகள் எதுவும் இல்லை. அவர்களின் சொந்த தேவைக்காகத்தான் அவர்கள் பெறுகின்றார்கள். அதற்கு என்னை பொருத்தமட்டில் வியாபார நோக்கத்திற்காக செயற்படுத்துகின்றார் என்றால் அதற்கு வியாபார கட்டண வரியை அறவிடலாம். எனது தனிப்பட்ட தேவைக்காக ஒரு கைகடிகாரத்தை அல்லது பேனையை online மூலம் பெற்றுக் கொள்கின்றேன் என்றால் அது தனிப்பட்ட தேவை. நுகர்வோர் அடிப்படையில் அதை நாங்கள் பெற்றுக் கொள்கின்றோம். நான் நினைக்கின்றேன் உள்ளூராட்சி மன்றங்கள் வரி அறவீடு செய்வது என்பது தனிப்பட்ட தேவைக்கு முடியாது என்பது எனது கருத்து. இதே வேளை இன்னும் ஒன்றை ஞாபகப்படுத்த வேண்டும்.

இலங்கையில் சகல பாகங்களில் இருந்து online மூலம் நாங்கள் பெற்றுக் கொள்கின்றோம். அதை விட எமது ஊரில் இருந்து பலதரப்பட்ட உற்பத்திப் பொருட்களை மகளிர்கள் மூலமாக குடிசை கைத்தொழில் மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்திப் பொருட்களை இங்கிருந்து online மூலமாக நாட்டின் பல பாகங்களுக்கும் கொண்டு செல்வதன் மூலம் அதற்கு நாங்கள் வியாபார கட்டளைச் சட்டத்தின் கீழ் அதற்குரிய பணியை மேற்கொண்டு வருமானத்தை பெறுவதன் மூலம் இந்த ஊரில் இருக்கின்ற பெண்கள் குறிப்பாக அல்லது சிறு குடிசை கைத்தொழில் செய்பவர்கள் போதிய இலாபங்களை எடுத்து நாட்டின் உற்பத்தியில் அவர்களும் பங்களிப்பு செய்கின்றார்கள். ஆகவே நாங்கள் எடுத்துக் கொள்வதை விட அனுப்பி வைப்பதற்கான முயற்சியில் அடிப்படை தேவைகளை அறிந்து எமது சபைக்கும் அதில் ஒரு கடமை இருக்கின்றது. பிரதேச சபையின்

கட்டளைச் சட்டத்தின் கீழ் தாராளமாக உற்பத்திகளுக்கு உதவுவதற்கு இடம் இருக்கின்ற படியினால் இதை விரிபுபடுத்தி ஊர் மட்டத்தில் இதை மேற்கொண்டு இங்கிருந்து உற்பத்திப் பொருட்களை online மூலமாக ஏனைய இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு தபால் திணைக்களத்தின் மூலம் என்னாலான உதவிகளை நான் மேற்கொள்வேன். இது எமது ஊருக்கு மாத்திரமல்ல எமது சபைக்கு மாத்திரமல்ல எமது நாட்டின் உற்பத்தி திறனுக்கு மாத்திரமல்ல பொதுவாக அனைத்து நாடுகளுக்கும் இது பிரயோசனமாக அமையும். இவ்வாறு மாற்றிக் கொள்வதுதான் சாலச் சிறந்தது என நான் கருதுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

online மூலம் வியாபாரம் செய்பவர்களுக்கு 1000.00 ரூபா கட்டணமாக அறவீடு செய்வோம்.

**தீர்மானம் - 04/60/18**

Online மூலம் வியாபாரம் செய்பவர்களுக்கு அனுமதி வழங்குவதுடன் வியாபார உத்தரவுப் பத்திர கட்டணமாக வருடத்திற்கு ரூபா 1000.00 அறவீடு செய்வதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, ஆலையடிச் சந்தையில் இருக்கின்ற இறைச்சிக் கடையை ஒருவர் கேட்டிருந்தார். அவர் எழுத்துமூலமான ஆவணங்கள் வந்திருக்கின்றதா என்று தெரியவில்லை. அதை இறைச்சிக் கடையாக அல்லது வேறு ஏதாவது தேவைக்கு பயன்படுத்தக் கூடியவாறு மாற்றியமைத்தால் நல்லது என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

ஒருவர் என்னை வந்து சந்தித்து சென்றார். அவர் இன்னும் எழுத்து மூலம் அவர் கோரிக்கை தரவில்லை. மூடி இருக்கின்ற கடையினால் சபைக்கு எந்த வருமானமும் இல்லை. வழமையான சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்தாமல் இதில் ஒன்று சபைக்கு வருமானமும், அந்தப் பகுதியில் இருக்கின்றவர்களுக்கு ஒரு சேவையும் ஆகும். ஆகவே இங்கு இருக்கின்ற நிபந்தனைகளின் படி ஒரு மாத Deposite உம் மாதா மாதம் வாடகையும் அறவீடு செய்வோம்.

**தீர்மானம் - 04/60/19**

ஆலையடிச் சந்தையில் இருக்கின்ற மாட்டிறைச்சிக் கடையறையை ஒரு மாத முற்பண வைப்பாகவும், ஒவ்வொரு மாதமும் ஏலவே கேள்வி கோரிய தொகைக்கு சபையின் வருமானத்தினைக் கருத்திற் கொண்டு வாடகைக்கு வழங்குவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

சம்மாந்துறையில் மக்கள் தொகை அதிகரித்து வருவதனால் இடங்களை தேடி மக்கள் விரிவடைந்து கொண்டு செல்கின்றார்கள். எமது ஊர் ஆலையடி சந்தையில் இருந்து படிப்படியாக வெளியில் வந்து ஹிஜ்ரா சந்திக்கு வந்தார்கள். ஹிஜ்ரா சந்தியில் இருந்து விரிவடைந்து பல பக்கமும் சென்று கொண்டிருக்கின்றார்கள். காணிகளின் விலைகள் கட்டுப்பாடு இல்லாமல் அதிகரித்துக் கொண்டு

செல்கின்றது. சாதாரண ஏழை மக்களுக்கு காணிகளை பெற்றுக் கொண்டு தனது மகளுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு இயலாத சூழ்நிலை இருக்கின்றது. இதனை கருத்திற் கொண்டு எதிர்கால நடவடிக்கைகளுக்காக சம்மாந்துறையில் இருக்கின்ற சில பிரதான வீதிகளில் இரு மருங்கிலும் இருக்கின்ற விவசாயக் காணிகளை குடியிருப்புக் காணிகளாக மாற்றுவதற்கு உரிய அதிகாரிகளிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

விளினியடி சந்தியில் இருந்து ஆண்டியர் சந்தி வரைக்கும் இரண்டு பக்கமும் மக்கள் குடியேறிக் கொண்டிருக்கின்றார்கள். வீடு கட்டி இருக்கின்றார்கள். ஆனால் குடியிருப்பு நிலமாக இன்னும் உரிமை கிடைக்கவில்லை. மக்களின் சனத்தொகை பெருக்கத்தினால் இடம்பெயர்ந்து செல்கின்றார்கள். ஆனால் உரிமைகள் மாற்றப்படாமல் இருக்கின்றது. இன்றைக்கு தீர்மானம் எடுத்து நாளைக்கு நடைபெறுகின்ற விடயம் இல்லை. ஆனால் தீர்மானம் எடுத்து ஆரம்பிக்கப்பட வேண்டிய இடம் பிரதேச சபை. சம்மாந்துறை அம்பாரை பிரதான வீதியில் விளினியடி சந்தியில் இருந்து ஆண்டியர் சந்தி ஊடாக மல்வத்தை வரையிலும் மல்காம்பிட்டி வீதியில் ஹிஜ்ரா சந்தியில் இருந்து பள்ளாறு வரையிலும், கைகாட்டி சந்தியில் இருந்து அம்பாரை சந்திக்கின்ற வீதி வரையிலும் பாதையின் இரு மருங்கிலும் இருக்கின்ற Reservation தவிர்ந்த 150 மீட்டர் குடியிருப்புக் காணிகளாக மாற்றுவதற்கு உரிய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுப்பதற்கு ஒரு தீர்மானம் எடுப்போம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எத்தனையாவது சபை என்று நியாபகம் இல்லை. 3வது சபையிலே என்னால் ஒரு பிரேரணை கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. சம்மாந்துறை பிரதேச சபை, பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பிரதான பாதைகளிலும் குடியிருப்புகளை அண்டிய விவசாயக் காணிகளிலும் 300 மீட்டர் குடியிருப்பு காணிகளாக மாற்றுவதற்கு இடங்களை நிரப்புவதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்ற முன்மொழிவு முன்வைக்கப்பட்டு சபையிலே ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. அதன் பிற்பாடு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று சபைக்கு அறியக் கிடைக்கவில்லை.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, முதன் முதலாக பிரேரணையாக விவசாயக் காணிகளை குடியிருப்புக் காணிகளாக மாற்றுவதற்கு கொண்டு வந்தோம். இது சம்மந்தமாக நாங்கள் ஆராய்ந்தோம். அதற்கமைவாக 05 வருடங்கள் விவசாயம் செய்யாமல் இருக்க வேண்டும். அதன் பின்னர்தான் குடியிருப்புக் காணிகளாக மாற்றலாம் என்று இருந்தது.

**தீர்மானம் - 04/60/20**
சம்மாந்துறையில் பெருகிவரும் மக்கள் தொகை காரணமாக குடியிருப்புக் காணிகள் இல்லாத காரணத்தினால் அம்பாரை பிரதான வீதி விளினியடிச்சந்தி தொடக்கம் மல்வத்தை வரை, மல்காம்பிட்டி பிரதான வீதி கைகாட்டிச் சந்தி தொடக்கம் பள்ளாறு வரை, கைகாட்டிச் சந்தி தொடக்கம் பயின்டன் ஆறு வரை, கைகாட்டிச் சந்தி தொடக்கம் கொச்சிக்காய்தூளர் சந்தி வரையான பாதைகளில் இரு ஓரங்களிலும் 150 மீட்டர் தூரம் குடியிருப்புக் காணிகளுக்கு அனுமதி வழங்குவதற்காக பிரதேச செயலாளருக்கு அறிவிப்பதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | பீ.எம்.மீரா முகைடீன் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சென்ற மாதத்தின் செலவுகளை உங்களது அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கின்றேன். இதில் ஏதாவது கேள்விகள் இருப்பின் கேட்கலாம். இல்லாவிட்டால் ஒருவர் ஆமோதியுங்கள்.

**தீர்மானம் - 04/60/21**

சென்ற மாதம் 2023.02.01 தொடக்கம் 2023.02.28 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான தீர்மானம்.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.எம்.நபீல்

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.ராஜேஸ்வரி அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கோரக்கர் மஹா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானம் செப்பனிடுவதற்காக JCB மற்றும் கனரக வாகனம், உழவு இயந்திரம் போன்றவற்றை வெள்ளி, சனி, ஞாயிறு நாட்களில் ஏதாவது ஒரு நாளில் செப்பனிடுவதற்காக தந்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

எனது பிரதேச எல்லைக்குட்பட்ட வீதிகளில் வெளிச்சமின்மை காணப்படுகின்றது. பாடசாலையின் பின் வீதி, கோரக்கர் பிள்ளையார் கோயிலின் பின் வீதி, கோரக்கர் 2ம் வீதி, கோரக்கர் 5ம் வீதி, கோரக்கர் 6ம் குறுக்கு வீதி இதற்கு இதுவரைக்கும் எவ்விதமான மின்விளக்குகளும் போடப்படவில்லை.

மட்டக்களப்புத்தரவை – 02 கோரக்கர் கிராமத்திற்கு பிரதான வீதியான கோரக்கர் வீதியிலுள்ள குறுக்கு வீதிகள் சென்ற காலங்களில் பெயரிடப்பட்டவை. பெயரிட்டதன் பிரகாரம் முதலாம் வீதி தொடக்கம் 7ம் வீதி வரை பெயரிடப்பட்டுள்ளன. எனவே எனது காலத்திற்குள் யெர்ப்பலகை போட வேண்டும். காரணம் கோரக்கர் மண்ணுக்கு இனியொரு தமிழ் பெண் பிரதிநிதித்துவம் கிடைப்பது கஸ்டம். எனது காலத்திற்குள் இட்டுத்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

கோரக்கர் பகுதியில் வடிகான்கள் துப்பரவு செய்யப்படவில்லை. வடிகான்களுக்குள் குப்பை கூழங்கள் வெற்றுப் போத்தல்கள் தங்கியுள்ளது. ஆகவே சென்ற மாதங்களில் அதிகமான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். எனவே ஒரு முறையாவது இதனை துப்பரவு செய்து தருமாறு தயவாய் கேட்டுக் கொள்கின்றேன்.

சம்மாந்துறை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட கிராமங்களுக்குள் போதைப்பொருட்கள் அதிகமாக இளைஞர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது. போதைப்பொருள் அற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டுமாக இருந்தால் பாடசாலை மட்டங்களில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும் என்று இந்த சபையில் தயவாய் கேட்டுக் கொள்கின்றேன்.

பொது மைதான வீதி ஏற்கனவே புணரமைப்பதற்காக அதிகமான போராட்டங்கள் எல்லாம் நடைபெற்றது. இந்த காலகட்டத்திற்குள் செய்ய இயலாவிட்டாலும் இனிவரும் காலங்களிலாவது அந்த வீதியை புணரமைத்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அடிப்படை தேவைகளான தெரு விளக்குகள், வடிகான் துப்பரவு செய்வது இவைகள் ஏற்கனவே நடந்து கொண்டிருக்கின்றது. நீங்கள் சொன்ன வீதிகள் மாத்திரமல்ல யானை பாதிப்பை எதிர்நோக்குகின்ற எல்லை கிராமங்கள் எல்லாவற்றிற்கும் தெருவிளக்குகள் பொருத்துவது ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. நீங்கள் குறிப்பிட்ட வீதிகளையும் அதில் உள்வாங்குவதற்கு முயற்சி செய்கின்றோம். பாடசாலை சிரமதானத்திற்கு மற்றும் சவக்காலையை துப்பரவு செய்வதற்காக கனரக வாகனங்களை அரைநாள் வழங்குவோம்.

**தீர்மானம் - 04/60/22**

கோரக்கர் பாடசாலை மற்றும் சவக்காலையினை சிரமதானம் செய்வதற்காக அரை நாள் JCB, கணரக வாகனம், உழவு இயந்திரம் என்பவற்றை வழங்குவதற்கான தீர்மானம்.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் எஸ்.ராஜேஸ்வரி
ஆமோதித்தவர் : கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர்

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

ஆண்டியர் சந்தியில் இருந்து 05 தூண்களுக்கு மின்விளக்குகள் போட இயலாத துர்ப்பாக்கிய நிலை இருக்கின்றது. யானை வந்து நின்றிருக்கின்றது வெளிச்சம் இல்லாமல் இருக்கின்றது. 05 தூண்களுக்கும் Cable இல்லாமல் இருக்கின்றது. உத்தியோகபூர்வமாக சபையால் கடிதம் எழுதி இருக்கின்றோம். ஆண்டியர் சந்தி இருந்து 05 தூண்களுக்கும் Cable இட்டால் நாங்கள் சபையால் மின் விளக்குகள் பொருத்துவோம் என்றும், சம்மாந்துறை மல்காம்பிட்டி சந்தியில் வாப்பாட மடு கூடுதலான விபத்துக்கள் நடைபெறுகின்ற இடம். அதற்கு வெளிச்சம் போட இயலாமல் இருக்கின்றது அங்கும் Cable இல்லை. அதையும் குறிப்பிட்டு கடிதம் எழுதியிருக்கின்றோம். இன்னும் அதற்கான பதில் வரவில்லை. இவ்வாறு பல இடங்களில் cable இல்லாததனால்தான் வெளிச்சம் போட இயலாமல் இருக்கின்றது.

எமது ஊருக்கு வருபவர்களுக்கு எந்த வீதி எங்கு செல்கின்றது என்று தெரியாத ஒரு நிலை இருக்கின்றது. RDA Board இனை தவிர அதை தாண்டி கவனிக்காமல் வருபவர்களுக்கு உதாரணமாக நெல்லுப்பிடிச் சந்தியால் வந்தால் இடது பக்கம் செல்கின்ற பாதை எங்கு செல்கின்றது நேராக செல்லும் பாதை எங்கு செல்கின்றது என்று தெரியாமல் இருக்கின்றது. ஹிஜ்ரா சந்தியினை எடுத்துக் கொண்டாலும் அதே பிரச்சினை. ஆகவே முக்கியமான 3 இடங்களான நெல்லுப்பிடிச் சந்தி, ஹிஜ்ரா சந்தி, ஆண்டியர்சந்தி ஊரின் திசைகளை காட்டுவதற்கு பெயர்ப்பலகை வைப்பதற்கு தீர்மானம் எடுப்போம்.

**தீர்மானம் - 04/60/23**

முக்கிய இடங்களான ஹிஜ்ரா சந்தி, நெல்லுப்பிடிச்சந்தி, ஆண்டியர் சந்தி போன்ற இடங்களில் ஊர்களின் திசைகளை காட்டுவதற்காக பெயர்ப்பலகை இடுவதற்கான தீர்மானம்.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர்

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் ஏ.எச்.எம். காலித் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த மேலான சபைக்கு தலைமை தாங்கும் புதிய கௌரவ தவிசாளராகிய கௌரவ ஐ.எல்.எம்.மாஹிர் அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தவனாக எனது உரையை ஆரம்பிக்கின்றேன். சம்மாந்துறை எனும் பாரிய ஊரில் இதுவரை இருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை தவிசாளர்கள் எத்தனையோ பல சேவைகளை செய்துள்ளனர். அவற்றின் பயன்களை எமது இன்றய சமூகம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றன. அதுபோல் இச் சபை இயங்கவுள்ள இந்த குறுகிய காலத்திலும் தம்மால் முடியுமான யதார்த்தமான சேவைகளை வழங்க நாம் அனைவரும் முனைய வேண்டும் என்பதே எனது இலக்கு.

அதனடிப்படையில் இன்று சம்மாந்துறையில் உள்ள அரச நிறுவனங்களின் தலைவர்களை இந்த ஊரின் வளர்ச்சிக்காக ஊக்கப்படுத்த வேண்டிய கட்டாய தேவையும் அதற்கான திட்டங்களை வழிவகுக்க வேண்டிய கடமையும் மக்கள் பிரதிநிதிகளாகிய எமக்கு கடமையாக உள்ளது. அதன்படி இந்த ஊரின் வளங்கள் மிருதுவாக பாதுகாக்கப்பட வேண்டிய தேவையுள்ளது. அதாவது சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரி, சம்மாந்துறை ஆசிரியர் பயிற்சி நிலையம், சம்மாந்துறையின் முக்கிய தேசிய பாடசாலைகள், தகுதியான உயர்நிலை பதவிகளிலுள்ள எமதூரின் நிர்வாக அதிகாரிகள் வெளியூர்களுக்கு திடீர் இடமாற்றங்களில் செல்வதை தடுத்தல், மாணவர் சமூகத்தினதும், இளைஞர்களின் ஒழுக்க விழுமியங்களிலும் செல்வாக்கு செலுத்துதல், சம்மாந்துறை மீன் சந்தையினை ஒழுங்குபடுத்தல், வீதியோர வியாபாரங்களை ஒருமைப்படுத்தி அசாதாரண விலைகளில் விற்பனை செய்வதை கட்டுப்படுத்தி சாத்தியமான விலைப்பட்டியலை நடைமுறைக்கு கொண்டுவரல், நமது மண்ணிலுள்ள காணிகளை பாதுகாத்தல் குறிப்பாக 05 பேர்ச் காணியை விட குறைந்த அளவுடைய காணிகளுக்கும் அத்தாட்சிப் பத்திரம் வழங்குவதற்கு சபையின் மூலமாக காத்திரமான தீர்மானத்தினை எடுத்து பிரதேச செயலகத்தின் ஊடாக நெறிப்படுத்துவதற்கு வழியமைத்தல், போதையற்ற சமூகத்தை கட்டியெழுப்புதல், சூழல் பாதுகாப்பு. இவ்வாறுள்ள விடயங்களை எமது இந்த மேலான சபையூடாக அமுல்படுத்த முன்மொழிவதுடன் குறுகிய காலம் செயற்படவுள்ள இந்த சபையின் தீர்மானங்களை வெறும் தீர்மானமாக மாத்திரம் எடுத்துவிடாமல் அதனை செயற்பாட்டு வடிவத்திற்குள் கொண்டுவர எத்தனிக்க வேண்டும்.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 06 ஆம் திகதி தன்னால் கௌரவ முன்னாள் தவிசாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் ‘‘பொது வசதிகளை பொருத்தமான இடத்தில் ஏற்படுத்தலும் முறைமையான வியாபார தளங்களை அமைக்க வழி செய்தலும்’’ என்ற தலைப்பில் பினவரும் விடயங்களை பரிந்துரைத்துள்ளேன். காலாகாலமாக மக்கள் பேரூந்திற்காக காத்திருக்கும் பொருட்டு அமைக்கப்பட்டிருந்த விளினியடி, ஹிஜ்ரா சந்தி, மத்திய மஹா வித்தியாலயம் போன்ற இடங்களில் இருந்த பஸ் தரிப்பிடம் உடைக்கப்பட்டிருந்தும் இதுவரை அது மீள் அமைக்கப்படவில்லை. தற்பொழுது இருக்கும் பேரூந்து தரிப்பிடங்களில் கூட வீதியோர வியாபாரம் நடைபெற்று வருவதை காணக்கூடியதாக உள்ளது.

ஏன் விளினியடியில் இருந்த Bus Halt உடைத்தது? Bus Halt Singer வந்ததற்கு பின்னர் வந்ததா? அல்லது singer வந்ததற்கு பின்னர் Bus Halt வந்ததா? அந்த இடம் வீரமுனை, சென்னல் கிராமம் பிரதேசத்தில் இருந்து பிள்ளைகள் வகுப்புகளுக்கு, வைத்தியசாலைக்கு செல்கின்ற இடம். singer இல் CCTV பொருத்தப்பட்டிருக்கின்றது. ஒரு தாய் பிள்ளைக்கு பாலூட்டக் கூடிய நிலை அவ்விடத்தில் இல்லை. குறைந்தது 03 பெண்களோடு வந்தால் கூட அவருடைய தேவையை பூர்த்தி செய்யலாம். இன்றைக்கு பாடசாலைக்கு செல்கின்ற மாணவர்கள், பல்கலைக்கழகத்திற்கு செல்கின்ற மாணவர்கள் வீதியில் இடம் இல்லாமல் பாதையோரமாக நிற்கின்றார்கள். இதனால் அப் பிள்ளைகளின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருக்கின்றது. Bus Halt உடைத்த காரணம் என்னவென்று தெரியாது. ஆனால் அதைவிட அழகான முறையில் அமைத்திருக்கலாம்.

இதற்கு பின்னர் இன்னொருவரின் கட்டடத்திற்கு முன்பு கொண்டுவருவதற்கு அனுமதி தரமாட்டார்கள். அந்த இடம் ஒரு தனிநபரின் செல்வாக்கினால் இந்த சபையில் இருக்கின்ற உறுப்பினர்களை தனிப்பட்ட முறையில் சந்தித்து இரவோடு இரவாக உடைக்கப்பட்டது. அந்த நேரம் நான் UN இல் கிளிநொச்சியில் வேலை செய்திருந்தேன். என்னால் வர முடியாமல் போய்விட்டது. இல்லாவிட்டால் அவ்விடத்தில் ஒரு போராட்டம் நடத்திருப்பேன். 12 மணிக்கு பின்னர் உடைக்கப்பட்டிருக்கின்றது. அதுமட்டுமல்ல ஹிஜ்ரா சந்தியை எடுத்துக் கொண்டால் வைத்தியசாலைக்கு செல்பவர்கள் மழை நேரத்தில் எங்கு நிற்கலாம். இடம் இல்லை. அதே மாதிரி பாடசாலைகளில் பாடசாலை முடிந்ததும் பெற்றோர்கள் வரும் வரையில் அந்தப் பிள்ளைகள் எங்கு நிற்பது. இந்த ஊரில் மாத்திரம்தான் இந்த விடயங்களுக்கு முன்னுரிமை இல்லலை. நான் ஏனைய மாவட்டங்களில் வேலை செய்திருக்கின்றேன். மொத்தமாக UN இல் 15 வருடமாக வேலை செய்திருக்கின்றேன். இந்த ஊரில் மாத்திரம் இதற்கு முக்கியத்துவம் இல்லை. கௌரவ தவிசாளர் அவர்களே, உங்களது காலத்திற்குள் விளினியடி சந்தியில் ஒரு Bus Halt அமைக்க வேண்டும்.

அடுத்ததாக சம்மாந்துறையின் நுழைவாயில்களான நெல்லுப்பிடிச் சந்தி மற்றும் வங்களாவடி சந்தி என்பவற்றிற்கு அருகில் சம்மாந்துறை இறைச்சிக் கடைகள் உங்களை வரவேற்கின்றது என்பது போன்ற உள்ளுணர்வுகளை ஏற்படுத்தும் வண்ணம் இருக்கின்ற நிலை மாற்றப்பட்டு, சமூகத்தின் பிரதான உணவுத் தேவையை பூர்த்தி செய்யும் இவ் இறைச்சிக் கடைகள் அப் பிரதேசத்தை விட்டு அகற்றி பொருத்தமான இடத்தில் அமைக்கப்பட வேண்டும்.

ஹிஜ்ரா சந்தி சுற்று வட்டம், விளினியடி சந்தி, நெல்லுப்பிடிச் சந்தி போன்ற இடங்களில் கட்டாயம் வீதிசமிஞ்சைகள் மற்றும் ஆண்டிட சந்தியில் வீதி சமிஞ்சையும் சுற்று வட்டமும் அமைக்கப்பட வேண்டும். அடுத்ததாக பாடசாலைகளில் இருக்கின்ற மைதானம் பயன்படுத்தப்படுகின்றது. உதாரணமாக மத்திய மஹா வித்தியாலயத்தில் ஏதாவது தேவை என்றால் போகின்றோம். எங்களது பிள்ளைகள் போகின்றது விளையாடுகின்றார்கள். அல் மர்ஜான் பாடசாலை நாங்கள் படித்த பாடசாலை. நாங்கள் பின்னேரங்களில் சென்று விளையாடி இருக்கின்றோம் தற்போது மகளிர் பாடசாலையானதன் பின்னர் அந்தப் பாடசாலை மூடிய நிலமையில் இருக்கின்றது. அந்த இடத்தை பின்னேரங்களில் பொழுதுபோக்கிற்கு உடற்பயிற்சிக்காக அல்லது அங்கு விளையாடக் கூடியதாக மாற்றித்தர வேண்டும். அந்தப் பாடசாலை அதிபரோடு கதைத்து அவர்களுக்கு தொந்தரவு இல்லாமல் பயன்படுத்துவதற்கு கேட்டுக் கொள்கின்றேன்

சம்மாந்துறையில் எந்தவொரு பாதையிலும் பெயர்ப்பலகை இல்லை. நீங்கள் பிரதான இடங்களை சொன்னீர்கள் அதே மாதிரி குறுக்குப் பாதைகளில் எந்தவொரு இடத்திலும் பெயர்ப்பலகை இல்லை. அதனை கட்டாயம் செய்ய வேண்டும். எல்லா ஊர்களிலும் பெயர்ப்பலகை அழகான முறையில் போடப்பட்டிருக்கின்றது. இவற்றை நாம் குழுவாக இருந்து ஒழுங்குபடுத்தி எம்மில் காணப்படுகின்ற வளங்களைப் பிரயோகித்து ஒழுங்கமைத்து செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்படுவது மாத்திரமல்லாது இந்த சபை அமர்வின் பின்னர் நம் அனைவரினதும் ஏகோபித்த முடிவின் பிரகாரம் கௌரவ தவிசாளரின் தலைமையில் மேற் குறிப்பிட்ட விடயங்கள் அத்தனையையும் சம்மாந்துறையின் ஊர் நிர்வாகம் அதாவது நம்பிக்கையாளர் சபை, ஜம்இய்யதுல் உலமா, மஜ்லிஸ் அஷ்ஷூறா உட்பட ஊரில் உள்ள முக்கிய அரச நிறுவனங்களின் உயர் அதிகாரிகள், நமது ஊரின் உயர் பதவிநிலை அதிகாரிகள் மற்றும் முக்கிய சமூக நலன் அமைப்புக்கள், புத்திஜீவிகள் ஆகியவற்றுடன் விரைவாக கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்து இந்த விடயங்களை கலந்தாலோசித்து நடைமுறைக்கு கொண்டுவர முன்வர வேண்டும் என்பது எனது மேலான கருத்தாக உள்ளது.

அத்துடன் எமது ஊர் மற்றும் சபையின் கீழுள்ள அயல் கிராமங்களில் உள்ள நமது சகோதர இனங்களையும் அரவணைத்து இனவாதமற்ற ஒரு சபையாக எமது சபையினை வழிநடாத்த வேண்டும். குறிப்பாக இன்று சம்மாந்துறை பாராளுமன்ற உறுப்பினரை இழந்த துர்பாக்கிய நிலையை அடைந்துள்ளமை நாம் அனைவரும் அறிந்த விடயமாகும். இது பெரும் மனவருத்தத்தை ஏற்படுத்தியுள்ள விடயம். இது சீர்செய்யப்பட முடியாத ஒன்றல்ல. நமது ஒற்றுமை எனும் கயிறு திடமாக பற்றிப்பிடிக்கப்பட்டால் இந்த நிலைமையை மாற்றலாம். அரசியலுக்காக நாம் ஒருவரை ஒருவர் தூற்றாது துச்சமென எண்ணி அவர்களின் கருத்துக்களை தட்டி விடாது அனைவரின் கருத்துக்களையும் ஒத்துழைப்புகளையும் கருத்திற் கொண்டு செயற்பட்டால் மாற்றம் காணலாம்.

எனவே, என்னால் முன்மொழியப்பட்டுள்ள அனைத்து அம்சங்களையும் கருத்திலெடுத்து அதற்கான அடுத்த கட்ட செயற்பாடுகளுக்கு ஒரு தீர்மானம் வரையுமாறு கௌரவ தவிசாளர் உட்பட கௌரவ உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன். சபைக்கு தலைமை தாங்கும் கௌரவ தவிசாளர் அவர்களே, இச் சந்தர்ப்பத்தினை வழங்கியமைக்காக தங்களுக்கும், இச் சபைக்கும், மேலும் நமது பிரதேச சபையில் பணிபுரியும் அலுவலக மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர், ஊழியர்களுக்கும் குறிப்பாக என்னையும் இச் சபையின் ஓர் உறுப்பினராக உள்வாங்குவதற்கு பரிந்துரை செய்த கட்சியின் முக்கியஸ்தர்களுக்கும் மீண்டும் ஒரு முறை உளப்பூர்வமான நன்றியினை தெரிவித்து விடைபெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீங்கள் குறிப்பிட்ட விடயங்களில் தீர்மானமாக பொருத்தமான இடங்களில் பஸ் தரிப்பிடங்களை அமைப்பதற்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டுக்கொள்வதாக ஒரு தீர்மானமும், சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குள் தனியார் வகுப்புக்களை இரவு 6.00 மணிக்கு பின்னர் நடாத்துவதை

தடை செய்வதற்கு ஒரு தீர்மானமாகவும், முக்கிய சந்திகளான நெல்லுப்பிடிச் சந்தி, வங்களாவடியில் இருக்கின்ற இறைச்சிக்கடைகளை பிரதான பாதைகளில் அல்லாமல் பொருத்தமான உள்வீதிக்கு அகற்றுவதற்கு ஆலோசனை வழங்குவோம். அடுத்தது வீதி சமிஞ்சைகள் மற்றும் சுற்றுவட்டம் மிக முக்கியமாக உணரப்படுகின்ற ஒன்று. நான் வந்த உடனே RDA இற்கு கடிதம் அனுப்பினேன். விளினியடி சந்தியில் அவசரமாக வீதி சமிஞ்சை விளக்குகள் உடனே பொருத்துங்கள் என்று, சபை பிரேரணையாகவே எடுத்துக் கொள்வோம் நெல்லுப்பிடிச் சந்தி, விளினியடி சந்தி, ஆண்டிட சந்தி, பூமரத்து சந்தி போன்ற இடங்களில் சமிஞ்சை விளக்குகளும், ஆண்டிட சந்தி சுற்றுவட்டம் அமைத்துத் தருமாறு சம்மந்தப்பட்ட திணைக்களத்திற்கு அறிவிப்பதோடு, இதை DCC Meeting இலும் சேர்த்துக் கோள்வோம்.

பெயர்ப்பலகை சம்மந்தமாக இந்த சபை ஆரம்பித்த காலத்தில் இருந்து இறுதிக்கூட்டம் வரை பேசப்படுகின்ற விடயம். 05 வருட காலத்திற்குள் செய்யாமல் போனதற்கு உண்மையிலே மன்னிப்புக் கேட்க வேண்டும் சம்மாந்துறை பொது மக்களிடம், அவர்கள் தான் எம்மை தெரிவு செய்தவர்கள். நாங்கள் யாரையும் குற்றம் சாட்ட இயலாது எல்லோரும்தான் இதற்கு பொறுப்புதாரிகள். தனிப்பட்ட முறையில் யாரையும் குறை கூற இயலாது. எனவே இந்த குறுகிய காலத்திற்குள் செய்ய வேண்டும். இது சாத்தியமற்ற விடயம். இனிவருகின்ற தவிசாளருக்கு அதை விட்டு வைப்போம்.

**தீர்மானம் - 04/60/24**

பொருத்தமான இடங்களில் பஸ் தரிப்பிடங்களை அமைப்பதற்காக சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிப்பதற்கான தீர்மானம்.

| | | | |
|---|---|---|---|
| பிரேரித்தவர் | : | கௌரவ உறுப்பினர் | ஏ.எச்.எம்.காலித் |
| ஆமோதித்தவர் | : | கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் - 04/60/25**

சம்மாந்துறை எல்லைக்குள் தனியார் வகுப்புகளை இரவு 6.00 மணிக்கு பின்னர் நடாத்துவதனை தடை செய்வதற்கான தீர்மானம்.

| | | | |
|---|---|---|---|
| பிரேரித்தவர் | : | கௌரவ உறுப்பினர் | ஏ.எச்.எம்.காலித் |
| ஆமோதித்தவர் | : | கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் - 04/60/26**

முக்கிய சந்திகளான நெல்லுப்பிடிச் சந்தி, பூமரத்து சந்தி, ஹிஜ்ரா சந்தி, விளினியடி சந்தி, ஆண்டியர் சந்தி போன்ற இடங்களில் வீதி சமிஞ்சை விளக்கு பொருத்துவதற்கும் ஆண்டியர் சந்தியில் சுற்றுவட்டம் அமைப்பதற்கும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிப்பதற்கான தீர்மானம்.

| | | | |
|---|---|---|---|
| பிரேரித்தவர் | : | கௌரவ உறுப்பினர் | ஏ.எச்.எம்.காலித் |
| ஆமோதித்தவர் | : | கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் பீ.எம்.மீரா முகைடீன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் காலித் அவர்கள் கூறிய விடயம் இந்த சபை காலத்தில் அல்ல. சென்ற சபை 2011 – 2015 காலப்பகுதியிலே விளினியடி சந்தியில் இருந்த பஸ் தரிப்பிடம் உடைக்கப்பட்டது. பல கடிதங்கள் அதை சுற்றி இருக்கின்ற கடை உரிமையாளர்களால் இந்த சபைக்கு அனுப்பப்பட்டது. அது சம்மந்தமாக நாங்கள் நடவடிக்கை மேற்கொண்டிருந்தோம். RDA இற்கு கௌரவ தவிசாளர் அவர்கள் எழுத்து மூலம் அனுப்பினார்கள். சில Bus Halt கள் காணப்படுகின்றது. அதற்கு நான் ஒரு மதிப்பீட்டறிக்கை தயாரித்து ஒரு பிரேரணை கொண்டு வந்தோம். வங்களாவடியில் ஒரு Bus Halt இருக்கின்றது. பஸ் வந்து ஓரமாக நிற்பதற்கு Path way இல்லை. எனது கண் முன் ஒரு விபத்து நடைபெற்றது. ஒரு சில இடங்களில் Path way இருக்கின்றது. ஏன் இதற்கு இல்லை என்று கேட்கின்ற நேரம் இந்த வீதியை அந்த நேரம் காபட் அபிவிருத்தி செய்தது சீன நாட்டினுடைய நிதி உதவியின் மூலம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுடைய காலத்திலே RDA சட்டத்திற்கு கீழ் Bus Halt எவ்விடத்தில் அமைக்க வேண்டும் என்று ஒரு சட்டம் இருக்கின்றது.

அது வங்களாவடி சந்தியில் இருந்து குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் இருக்க வேண்டும். விளினியடிச் சந்தியில் இருந்து உடைக்கப்பட்ட Bus Halt இற்கும் ஏன் இது இல்லை என்று பார்த்தால் அது அவ்விடத்தில் பொருத்தம் இல்லை. ஏன் கட்டியது என்று கேள்வியை கேட்கின்ற நேரம் 1995 ஆம் ஆண்டு OIC ஆக இருந்த கப்பார் அவர்கள் அந்த உத்தியோகத்தரின் நிதியைக் கொண்டு பொதுமக்களையும் பாதுகாப்புப் படையையும் இணைத்து விளையாட்டுப் போட்டி ஒன்று ஏற்பாடு செய்து அதனுடைய அன்பளிப்பாக அந்த இடத்திலே Donated By Police என்று அவ்விடத்திலே நிர்மானித்தது. அதற்கான எந்தவொரு அனுமதியும் RDA இடம் இல்லை. எனவே அந்த Bus Halt இனை உடைப்பதற்காக எடுத்த நடவடிக்கையின் விளைவாக அனுமதி இல்லாத கட்டிடம் என்பதால் அதை உடைக்கத்தான் வேண்டும் என்று உடைத்தார்கள். அதற்கு பதிலாக அல் மர்ஜான் பாடசாலைக்கு முன் கட்டப்பட்ட பின்னர்தான் அது உடைக்கப்பட்டது.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இது இரவோடு இரவாக உடைக்கப்பட்டது. பிரதேச சபைக்கும் அதற்கும் எந்த சம்மந்தமும் இல்லை. சமிஞ்சை விளக்குகள் போட வேண்டும் என்று பலமுறை கதைத்திருக்கின்றோம். எங்களால் செய்ய இயலாத ஒரு வேலை. பெருந் தொகை பணம் ஒதுக்க வேண்டி இருக்கின்றது. எத்தனை கூட்டத்தில் தீர்மானம் எடுத்திருக்கின்றோம். நாங்கள் முயற்சிகள் செய்யாமல் இல்லை. முன்னாள் கௌரவ உறுப்பினர் சரீபா அவர்களின் சகோதரர் SI காதர் அவர்கள் ஒரு சாட்சி வாருங்கள் என்று கேட்டார். இது பொலீஸால் கட்டப்பட்டது. இதற்கு நடவடிக்கை எடுப்போம் என்று, சட்டரீதியாக நமக்கு குறுகிய காலம்தான் இருக்கின்றது. இந்த காலத்திற்குள் என்ன செய்ய வேண்டுமோ அத்தனையும் செய்ய வேண்டும். அதனடிப்படையில் மிக முக்கியமானது நெல்லுப்பிடிச் சந்தியில் இருக்கின்ற அதே அமைப்பில் ஆண்டிட சந்தியிலும் ஒரு சுற்றுவட்டம் வர வேண்டும். தற்காலிகமாக நீங்கள் குறிப்பிட்டது போல நெல்லுப்பிடிச் சந்தி, ஹிஜ்ரா சந்தி, ஆண்டிட சந்தியிலும் பெயர்ப்பலகையை தற்போது செய்யலாம். அதை உடனடியாக செய்ய வேண்டும். சென்ற வருடமும் கொரானா, ஆட்சி மாற்றம் போன்ற காரணங்களினால் எந்தவொரு வாழ்வாதாரமும் மக்களுக்கு உதவி செய்வதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. இது இறுதியான சபை என்றபடியினால் சென்ற வருடத்திற்கும் இந்த வருடத்திற்கும் வாழ்வாதார திட்டத்தினை கௌரவ தவிசாளர் அவர்கள் 20 கௌரவ உறுப்பினர்களுக்கும் பெற்றுத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நாம் புனித நோன்பை எதிர்நோக்கிய வண்ணம் இருந்து கொண்டிருக்கின்றோம். அதற்கமைய புனித நோன்பு என்றால் பேரிச்சம்பழம் எல்லோருக்கும் நியாபகத்திற்கு வரும். இந்த காலகட்டத்தில் நாடு பொருளாதார சீரழிவில் அகப்பட்டிருக்கின்ற காலகட்டத்தில் பேரீச்சம் பழங்கள் என்பது சவூதி அரேபியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற ஒரு பொருளாக இருக்கின்றது. இந்த பொருளாதார சிக்கலில் நாடு இருக்கின்ற நிலையில் இந்த

நாட்டின் முஸ்லிம்கள் தமது மதக் கடமையான புனித நோன்பை நோற்க வேண்டும் என்கின்ற அவர்களது கடப்பாட்டை மதித்து இந்த நாட்டின் சர்வ அதிகாரம் கொண்ட அதிமேதகு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களால் அந்த பேரிச்சம் பழத்திற்கான பண்ட வரியாக இருக்கின்ற 200 ரூபாவை ஒரு ரூபாவாக ஆக்கியுள்ளார் என்பது இந்த நாட்டு முஸ்லிம்களுக்கு அவர் கொடுக்கின்ற உயரிய மரியாதையும் இந்த நாட்டின் முஸ்லிம்கள் தங்களது மத கடமைகளை செய்வதற்காக அவர் வழங்கிய அந்த ஒத்துழைப்பும் என்பதை யாரும் மறுக்க முடியாது. அதற்காக நாடளாவிய ரீதியில் கௌரவ அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் மேற்கொள்ளப்பட்ட இந்த காலகட்டமானது சாதாரணமாக விலையேற்றம், வரிச் சுமைகளை இந்த நாட்டு மக்கள் அனுபவித்து வருகின்ற நேரத்தில் முஸ்லிம்களை மதித்து இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டமைக்காக சம்மாந்துறை பிரதேச சபை மூலம் தீர்மானம் எடுக்கப்பட்டதாக நன்றி தெரிவித்து ஒரு மடலை அனுப்பி வைக்க வேண்டும் என்பதுதான் எனது தயவான கோரிக்கையாகும்.

அது மட்டுமல்ல அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் இன்னும் ஒன்றைக் கூறி இருக்கின்றார் இலங்கை வாழ் முஸ்லிம்கள் மட்டுமல்ல சிறுபான்மை மக்கள் அதிலும் இலங்கை வாழ் முஸ்லிம்களின் தனியார் சட்டத்தில் யாரும் கை வைக்க முடியாது என்கின்ற அந்த கட்டளையையும் இட்டிருக்கின்றார். இது இந்த நாட்டில் இருக்கின்ற ஒட்டுமொத்த முஸ்லிம்களின் உரிமைக்காக அவர் வழங்கிய ஆணை என்பதுதான் அவரால்தான் இந்த முஸ்லிம்களுக்கான ஆணை வழங்கப்பட்டுள்ளது என்பதை அழுத்தம் திருத்தமாக இவ்விடத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். அதே நேரத்தில் 2018 ஆம் ஆண்டு பிரதேச சபை அமைக்கப்பட்டு நிறுவப்பட்ட காலத்தின் போது இங்கு தற்போது வீதி சமிஞ்சை விளக்குகள் பற்றி பல கௌரவ உறுப்பினர்கள் பேசினார்கள். ஆனால் 2018 ஆம் ஆண்டு என்னால் முன்வைக்கப்பட்ட பிரேரணையின் பிரதி கையில் இருக்கின்றது. நான் அந்த நேரத்தில் முன் சொல்லப்பட்ட இடங்களில் வீதி விளக்குகளும் அல் மர்ஜான் மகளிர் பாடசாலைக்கு முன்பாக மேன்பாலம் அமைக்கப்பட வேண்டும். அது மாத்திரமல்ல காரைதீவில் நிறுவப்பட்டிருக்கின்ற அதே மாதிரியான உயர்ந்த மின்விளக்குகளால் சம்மாந்துறை அலங்கரிக்கப்பட வேண்டும் என்று வேண்டிக் கொண்டேன். அதற்காக நான் முயற்சியும் எடுத்தேன்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இஸ்மாயில் அவர்கள் அவரும் முயற்சி எடுத்தார் எனக்கு ஒரு கோடி ரூபாவும் அவருக்கு ஒரு கோடி ரூபாவுக்குமான மின்விளக்குகளுக்கு அனுமதி RDA இனால் அனுமதிக்கப்பட்டிருந்தது. அந்த நேரத்தில் அரசாங்கம் மாறக்கூடிய சூழ்நிலை வந்தபடியினால் என்னால் அதை எடுத்துக் கொண்டு வர முடியவில்லை. ஆனால் முதன் முதலில் இந்த சபையில் பிரேரணையாக எழுத்து மூலம் முன்வைத்தது வீதி விளக்கு, வீதி சமிஞ்சை, மேம்பாலம் என்பவற்றை நான் இந்த சபைக்கு கௌரவ உறுப்பினர் இருக்கின்றார்கள் அவர்களுக்கும் தெரியும் நான் ஞாபகப்படுத்துகின்றேன். அது மாத்திரமல்ல இந்த நாட்டின் பெண்களை பெண் சமூகத்தை கௌரவப்படுத்திய அரசாங்கம் நல்லாட்சி அரசாங்கம். அந்த நேரத்தில் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களும், கௌரவ பிரதம மந்திரியாக இருந்த ரணில் விக்ரமசிங்க அவர்களும் கொண்டுவரப்பட்ட 25% இன் காரணமாக எமது தாய்க்குலங்கள் இன்று எமது சபையில் காட்சியளிக்கின்றார்கள். அந்த சாதனையையும் எமது அதிமேதகு ஜனாதிபதி அவர்கள்தான் முன்வைத்தார்கள் என்பதை இவ்விடத்தில் நியாபகப்படுத்திக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்த சபை இந்தளவுக்கு மேன்மையாக பேசப்படுவதற்கான காரணம் இந்த சபையை வழிநடாத்திய முன்னாள் தவிசாளர் அவர்களின் சீரிய நிர்வாக அமைப்பும் எல்லா உறுப்பினர்களோடும் நடந்து கொண்ட பண்பான நிலையும் ஒரு நிர்வாக திறமையின் காரணமாகத்தான் அதிகமான விடயங்களை இந்த சபை ஊடாக விளக்கங்களை அவர் ஊடாக என்னை பொருத்தமட்டில் விளங்கிக் கொண்டேன் அதற்காக அவருக்கும் இந்த இடத்தில் நன்றி சொல்ல விரும்புகின்றேன். அதேநேரம் மார்ச் 8 உலக மகளிர் தினமாக இருப்பதனால் பெண்களை எந்த வகையில் கௌரவப்படுத்த வேண்டுமோ அத்தனை வகையிலும் பல வகையான முறைகளில் அவர்களை கௌரவப்படுத்த வேண்டும். அதற்குரிய செயல் திட்டங்கள் தற்போது கௌரவ உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டது. அதனையும் அமல்படுத்துவீர்கள் என நினைக்கின்றேன். அத்தோடு போக்குவரத்து சம்பந்தமாக பஸ் தரிப்பிடம் சம்பந்தமாகவும் அண்மையில் ஹிஜ்ரா சந்தியில் அமைக்கப்பட்டிருந்த நகை கடை முதலாளி ஊடாக பிரயாணிகள் விரட்டப்பட்ட சம்பவத்தை நான் நேரில் கண்டு சபையில் முன்வைத்தேன் என்பதற்கும்

கௌரவ உறுப்பினர்கள் தான் சாட்சியாக இருக்கின்றார்கள். எமது சபை இத்துடன் இறுதிச் சவையாக இருக்கலாம் நாங்கள் இவ்வளவு காலமும் இந்த சபையில் பலவகையான தீர்மானங்களையும் பலவகையான செயற்பாடுகளையும் எங்களது கௌரவ முன்னாள் தவிசாளர் ஊடாக எங்களது சபையின் செயலாளர் ஊடாகவும் முன்னெடுத்திருக்கின்றோம். அதனடிப்படையில் வெளிக்கள உத்தியோகத்தர்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அனைவரும் இந்த சபையின் ஊழியர்கள் உட்பட அனைவரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கி இருக்கின்றார்கள் அதற்கு நான் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். பிரதேச சபை கூட்டத்திலும் கூட ஹிஜ்ரா முதலாம் வீதி மரங்களின் கிளைகளினாலும் ஓலை மட்டைகளினாலும் மூடப்பட்டிருக்கின்றது அதனை நிவர்த்தி செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த ஊர் சம்பந்தமாக இந்த ஊரின் அபிவிருத்தி சம்பந்தமாக தங்களுடன் பேசுவதற்காக நேரம் கேட்டிருந்தேன். 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தீர்மானம் ஒன்று முன்னாள் கௌரவ தவிசாளர் அவர்கள் இருக்கும் போது எடுக்கப்பட்டது. அதில் 14 வேலைகள் நிறைவேற்றப்படவில்லை. கௌரவ தவிசாளர் அவர்களே, சென்ற மாதம் இதில் குறிப்பிட்ட இரண்டு வேலைகளை தான் நான் சுட்டிக்காட்டினேன். S வாய்க்கால் துப்புரவு செய்த குறையோடு தவிசாளர் ராஜினாமா செய்ததோடு செலவு செய்வதற்கான அனுமதி தருவதற்கு யாரும் இல்லை என்பதனால் அந்த வேலை இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று செயலாளர் அவர்கள் கூறினார். கூட்டம் முடிவடைந்ததன் பின்னர் மூன்று நான்கு தடவை தவிசாளர் அவர்களிடம் வந்து கேட்டேன் அந்த வாய்க்காலை சுத்தம் செய்வதற்கு எடுத்து வந்த எக்ஸ்கெவேட்டர் மெஷின் நீர்ப்பாசனத்திற்கு சொந்தமானது.

கௌரவ தவிசாளர் அவர்களிடமும் வந்து பேசிய போது அறுவடை காலம் முடிவடைந்த பின்னர் வட்டை வேலைகள் செய்ய வேண்டும் என்று பொறியியலாளர் அந்த மெஷினை ஏற்றிச் சென்று விட்டார். ஒரு பகுதியை துப்பரவு செய்த மாதிரி தண்ணீர் தேங்கி நிற்கின்றது அதனால் அந்த பிரதேசத்தில் உள்ள இரண்டு பிள்ளைகளுக்கு டெங்கு நோய் ஏற்பட்டுள்ளது. அந்தத் தண்ணீரை ஓட வைப்பதற்காக அனுமதியினை கொடுங்கள். நாம் வாகனத்தில் குப்பைகளை எடுப்பதும் டீசலை கொடுப்பதும்தான். அத்துடன் செந்நெல் கிராமம் முதலாம் பிரிவில் மலை உடைப்பது சம்பந்தமாக பேசியிருந்தேன். கிட்டத்தட்ட எடுக்கப்பட்ட தீர்மானம் 13 தீர்மானங்களில் அதில் இரண்டையும் சுட்டிக்காட்டி இருந்தேன். கௌரவ தவிசாளர் அவர்கள் காலையில் பேசியது போன்று முன்னுரிமைப்படுத்தி செய்ய வேண்டும் என்று கூறினார்.

தீர்மானம் 4/58/16 சபையின் நிதி மூலம் அம்பாறை ஏழாம் வீதியில் அமைந்துள்ள பாலத்தின் புனர்நிர்மாணம் செய்வதற்கான தீர்மானம். அது செய்யப்படவில்லை. அடுத்ததாக தீர்மானம் 4/58/19 வைத்தியசாலை மூன்றாம் குறுக்கு வீதியில் உள்ள கல்வெட்டினை திருத்தம் செய்தல், ரான்ஸ்போமர் வீதியும் S வாய்கால் வீதியும் சந்திக்கும் இடத்தில் உள்ள கல்வெட்டினை திருத்தம் செய்தல், ஆலமரத்து வீதியினை திருத்துதல், ஹிஜ்ரா 1ம் வீதி முடிவடையும் ஹிஜ்ரா 2ம் வீதியுடன் இணையும் வடிகானை திருத்தம் செய்தல். இது சென்ற மாத கூட்டறிக்கையிலும் உள்வாங்கப்பட்டிருக்கின்றது. அடுத்தது அம்பாறை 12ம் வீதியில் உள்ள கல்வெட்டினை திருத்துதல். இதுவும் சென்ற மாத கூட்டறிக்கையில் உள்வாங்கப்பட்டிருக்கின்றது. மலையடி 4 இல் கல்வெட் அமைத்தல், விஷவைத்தியர் வீதியினை திருத்தம் செய்தல். இது இன்றய தீர்மானத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றது. அடுத்தது மல் 10ம் வீதியினை திருத்துதல், சக்தி வீதி கல்வெட் அமைத்தல், சென்னல்கிராமம் 1ம் பிரிவில் மையவாடிக்கு மேற்குப் புரத்தில் உள்ள மலையினை உடைத்து செப்பனிடல், மலையார் ஆரப்பத்தை, கல்லறிச்சல் - 02 வடிகான் மற்றும் மதகு அமைத்தல். 4/58/22 இல் சென்னல் வாசிப்பு நிலையத்தை சுற்றி இருக்கும் வேலிகளில் திருத்த வேலைகள் செய்தல் போன்ற வேலைகளை சபையில் போட்டவுடன் முன்னுரிமைப்படுத்த செய்திருக்க வேண்டும்.

கௌரவ தவிசாளர் அவர்களே இந்த சபையில் நாம் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் நாங்கள் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு இருக்கின்றோம் என்று பேசிக் கொண்டு வருகின்றோம். நான் வேறு ஒரு கட்சிக்காரன் வேறு ஒரு முதன்மை வேட்பாளராக தேர்தல் கேட்கின்ற நோக்கத்திற்காக எனது உள்ளம் நினைக்கும் என்னால் முன்வைக்கப்பட்ட வேலைகள் செய்யப்படவில்லை. தவிசாளர் எனது வேலையை கவனத்தில் கொள்ளவில்லை நான் இருக்கின்ற

நிலைமையில் எனது மனம் நினைக்கின்றது. சபையில் தான் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் நடந்து கொள்ள வேண்டும் என்று பேசுகின்றீர்கள். வெளியில் கட்சி சார்புள்ள மாதிரி தான் உங்களது வேலைகள் நடைபெறுகின்றது என்று எனது உள்ளம் நினைப்பதை நான் சொல்லுகின்றேன். இதை சபையில் போட்டு கதைத்து காலத்தை கடத்தாமல் அதனை செய்யுங்கள் அல்லது செய்யாமல் விடுங்கள். முதலில் தீர்மானம் எடுத்ததை செய்யுங்கள் அதன் பின்னர் நிதி நிலைமையை பொருத்து செய்யுங்கள். 3 தடவைகள் கௌரவ தவிசாளர் அவர்களை சந்தித்து பேசி இருக்கின்றேன். இவைகள் ஆரம்பித்த வேலைகள் இடை நடுவில் நிறுத்தப்பட்டு இருக்கின்றது. ஏன் அதனை செய்து தராததுக்குரிய காரணம் என்ன? அது அத்தியாவசியம் இல்லையா? அப்படி செய்ய வேண்டாம் என்று யாரும் முறைப்பாடு தந்தையா? இறுதியாக நான் இரண்டு மடல் கொடுத்தேன். அதற்கு பின்னர் அவதானித்தேன் கௌரவ தவிசாளர் அவர்கள் பதவியை பாரம் எடுத்ததுக்கு பின்னர் வருகின்ற வேலைகளைத்தான் கவனத்தில் கொள்வாரோ என்று நினைத்தேன்.

ஒரு கடிதம் கொடுத்தேன் 2023.02.21 ஆந் திகதி மலையடிக்கிராமம் - 04 இல் நாங்கள் சபையால் ஏற்பாடு செய்து பாதை ஒன்றை புதிதாக திறக்கப்பட்ட பாதைக்கு மண் இருக்கின்றது அதை ஏற்றுவதற்கு இயந்திரங்களை தாருங்கள் என்று கேட்டேன். அடுத்தாக வடிச்சல் வாய்க்கால் சீரற்று இருப்பதனால் மழை காரணமாக அந்தப் பகுதியில் இருக்கின்றவர்களின் வீடுகளுக்குள் தண்ணீர் செல்வதால் அந்த வாய்க்காலை திறந்து விட வேண்டும் என்று தவிசாளர் அவர்கள் பதவி ஏற்றதன் பின்னர் 2023.02.21, 2023.02.23 ஆந் திகதிகள் கொடுக்கப்பட்டதை நேற்று தொழில்நுட்ப உத்தியோகத்தர் கௌரவ தவிசாளர் இந்த வேலையை பார்க்கச் சொல்லியிருக்கின்றார் என்றார். அதற்கு நான் 12ம் மாதம் எடுக்கப்பட்ட வேலைகளைப் பற்றி சொல்லவில்லையா என்று கேட்டதற்கு இல்லை என்று சொன்னார்கள். கூட்டத்தை முடித்த பின்னர் பார்ப்போம் என்று கூறினேன். அப்போதும் யோசித்தேன் கௌரவ தவிசாளர் வந்ததன் பின்னர் எழுத்து மூலம் கொடுப்பதுதான் நடக்குமோ என்று நினைத்தேன். தயவு செய்து இந்த 14 வேலைகளையும் உள்வாங்கி செய்வதா? இல்லையா? முன்னுரிமைப்படுத்துவதா? என்று பார்த்து அதற்குரிய தீர்மானத்தை எடுக்குமாறு தாழ்மையாக கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர் அவர்களே, S வாய்க்கால் ஏற்கனவே தீர்மானம் எடுத்தது. செய்ய வேண்டிய வேலை. ஒரு நாள் வேலை செய்துவிட்டு மழை காரணமாக இடை நிறுத்தப்பட்டது. எனக்கு முதல் நாள் நீங்கள் எடுத்த கழிவுகளை கொண்டு போய் கொட்டிய இடத்தில் உள்ள பொதுமக்களிடம் இருந்து முறைப்பாடு வந்திருக்கின்றது. மழைக்காலம் என்பதனால் நாற்றம் வருகின்றது. நடந்து செல்ல இயலாமல் வழுக்கல் நிலையாக இருக்கின்றது. இந்த கழிவுகளை ஏன் இங்கு கொட்டுகின்றீர்கள் சுற்றுச் சூழலில் இருக்கின்ற பொதுமக்கள் முறைப்பாடு செய்திருக்கின்றார்கள். அது சம்பந்தப்பட்ட பொறியாளரிடம் கதைத்த நேரம் அவர் உங்களை சொன்னார் நீங்கள் தான் அந்த இடத்தை காட்டியது என்று, தற்போதய நிலைமை என்னவென்றால் மழை காரணமாக நாம் விரும்பினாலும் அவர்கள் செய்வதற்கு தயார் இல்லை. நீர் வற்ற வேண்டும். வரட்சியான காலநிலையில் தான் அதை தோண்ட இயலும். அதற்காகத்தான் அந்த இயந்திரங்களை அங்கு வைத்திருக்கின்றார்கள். ஆகவே நான் வேண்டுமென்று மாற்றுக் கட்சிக்காரர் என்பதற்காக அந்த வேலையை நிறுத்தவில்லை. இது எங்களது சபைக்குரிய வாய்க்கால் இல்லை. நீர்ப்பாசன திணைக்களத்திற்கு சொந்தமான வாய்க்கால். மழைக்காலத்தில் அந்த வாய்க்கால் தோன்ற இயலாது. வரட்சியான காலத்தில் தோண்ட வேண்டும் தோன்டினாலும் அந்த கழிவுகளை கொண்டு கொட்டுவதற்குரிய சரியான இடத்தை அடையாளம் கண்ட பின்னர் தான் தோண்ட வேண்டும். இந்த இரண்டு காரணங்களால் தான் அந்த வேலை நிறுத்தப்பட்டுள்ளது

அடுத்ததாக நீங்கள் சொன்ன இடம் எனக்கு எவ்விடத்தில் இருக்கின்றது என்று தெரியாது. தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை அழைத்து கேட்டேன் அவர்களுக்கும் அந்த இடம் தெரியாது. நான் சொன்னேன் முறைப்பாடு தந்த கௌரவ உறுப்பினரை சந்தித்து அந்த இடத்தை சென்று பார்த்து அறிக்கையை தாருங்கள் என்று கேட்டேன். மூன்று நாட்களாக முயற்சி செய்கின்றார்கள் இறுதியாக நேற்று தான் உங்களுடன் பேச கிடைத்தது. நீங்கள் சொன்னீர்களாம் சபை அமர்வுக்கு பின்னர் வருகிறேன் என்று, அதில் என்னை குற்றம் காண்பதற்கு எந்த காரணமும் இல்லை.

தற்போது அறுவடை காலம் முடிவடைகின்றது. எல்லா இடமும் யானைப் பிரச்சினை வந்திருக்கின்றது. நாங்கள் சம்மாந்துறையை மாத்திரம் நினைக்கக் கூடாது. சம்மாந்துறையை அண்டி இருக்கின்ற கிராமங்கள் வளத்தாப்பிட்டி, மல்வத்தை, வீரமுனை, மஜீட்புரம், நைனாக்காடு போன்ற ஊர்களின் நிலைமை என்னவென்றால் சுற்றி யனை நிற்கின்றது. நடுவில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அங்கு இருக்கின்ற மக்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு கனரக வாகனங்கள் தேவைப்படுகின்றது. இன்றும் கூட மஜீட்புரத்திற்கு செல்கின்ற வழியில் எமது இயந்திரங்கள் வேலை செய்து கொண்டிருக்கின்றது. பொதுமக்கள் கூடுதலாக பாவனை செய்கின்ற பாதைகள். யானைகள் வந்து நின்றாலும் யாருக்கும் தெரியாது. ஒரு அனர்த்தம் நடந்ததன் பின்னர் நாங்கள் நடவடிக்கை எடுப்பதில் எந்த பிரயோசனமும் இல்லை. இழந்த உயிர்களைப் பெற்றுக் கொள்ள இயலாது.

நைனாகாட்டில் யானை எப்படி தாக்கியது. ஒரு பற்றைக்குள் யானை நின்று இருக்கின்றது. பக்கத்தில் இருந்தவருக்கு தெரியாது. அந்தப் பற்றை வெட்டி துப்பரவு செய்யப்பட்டிருந்தால் யானை நிற்பதைக் கண்டு அவர் தப்பி இருப்பார். வெளிச்சம் போடுகின்றோம் ஏன் யானை நின்றாலும் அதைக் கண்டு மக்கள் தற் பாதுபாப்பிற்காக ஓடி ஒழியலாம் என்பதற்காகத்தான். யானையை கட்டுப்படுத்துவதற்கு எங்களாலும் இயலாது, அரசாங்கத்தினாலும் இயலாத நிலமை ஒன்று இருக்கின்றது. யானையை கட்டுப்படுத்துவதற்காக இரவு பகல் பாராது இரவு 12 மணி வரையும் நான் களத்தில் நின்றிருக்கின்றேன். சபையின் வாகனத்தை ஒரு நாள் கொடுத்திருக்கின்றோம். நேற்று கூட 200க்கும் மேற்பட்ட யானைகள் சம்மாந்துறையில் நிற்கின்றது என்று முறைப்பாடு வந்திருக்கின்றது. அவர்களுக்கு ஆளணி தட்டுப்பாடு ஆட்கள் இல்லை. வாகனத் தட்டுப்பாடு வாகனம் இருந்தாலும் டீசல் இல்லை. சபையின் செலவில் டீசல் அடித்துக் கொடுத்திருக்கின்றோம். ஏனென்றால் எமது தலையாய கடமையில் ஒன்று பொதுமக்களை பாதுகாப்பது.

நான் ஆரம்பத்திலேயே கூறியது போன்று இந்த சபை மாத்திரம் அல்ல எந்த உள்ளூராட்சி சபையின் அடிப்படைத் தேவைகளில் முதலாவது குப்பை அள்ளுவது. இரண்டாவது தெருலாம்பு, மூன்றாவது சுகாதாரம். தெருலாம்பு கட்டாயம் போடப்பட வேண்டிய ஒன்று. நான்கு மாதங்களாக தெருலாம்பு போடப்படவில்லை. ஒரே நேரத்தில் எல்லா வேலைகளும் ஒன்றாக வந்தால் நான் எதற்கு முக்கியத்துவம் கொடுப்பது? மக்களை பாதுகாக்கின்ற வேலைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதா? அல்லது மழை என்றாலும் பறவாயில்லை என்று வாய்க்காலை தோன்டுவதா? என்னில் நீங்கள் குறை காண வேண்டாம். நான் நீதியாக நியாயமாகத்தான் நடந்து கொண்டிருக்கின்றேன். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நீங்கள் மாற்றுக் கட்சிக் காரர் என்பதற்காக உங்களுக்கு எந்த அநியாயமும் நான் செய்யவும் இல்லை இதற்கு முதல் சபையில் இருந்த தவிசாளர் கூட செய்ததும் கிடையாது. இந்த கதிரையில் அமர்ந்தால் இது ஒரு பொதுவான கதிரை. எல்லோரையும் சமமாக மதிக்க வேண்டிய கதிரை. தனிநபர்கள் வேறாக இருக்கலாம். அவர் அவர்களுக்கு அரசியல் அபிலாசைகளும், உரிமைகளும் இருக்கின்றது. அதை அவர்கள் சபைக்கு அப்பால் செய்து கொள்ளலாம். இந்த கதிரையில் நாளைக்கு உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் வந்து நீங்களும் இந்த கதிரையில் அமர்ந்தால் இதற்கு முதல் இருந்த தவிசாளர்கள் கடமையாற்றியது மாதிரி நீதியாக நேர்மையாக நியாயமாக செய்ய வேண்டும் என்றுதான் நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன்.

நாங்கள் S வாய்க்காலை சபையின் பராமரிப்பின் கீழ் தாருங்கள் என்று எழுத்து மூலம் கேட்டும் அதை தர இயலாது என்று எழுத்து மூலம் வந்திருக்கின்றது. அப்படி இருந்தும் நாங்கள் சபையின் காசை ஏன் செலவழிக்கின்றோம் என்றால் பொதுமக்களுக்கு நன்மை இருக்கின்றது என்பதால். அது எங்களது கட்டுப்பாட்டிற்குள் இல்லாத வாய்க்கால். அப்படி இருந்தும் அந்த வாய்க்காலை தோண்ட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தான் நான் இன்றைக்கும் இருக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, தோன்றப்படுகின்ற மண்ணை போடுவதனால் துர்நாற்றம் வீசுகின்றது என்று எந்த மக்கள் சொன்னது. அந்த மக்கள் தான் இந்த வீதியில் போடுங்கள் என்று சொன்னார்கள். இன்றுதான் நீங்கள் சொல்லி எனக்கு தெரியும் நான் பல தடவை உங்களை சந்திருக்கின்றேன். அந்த நேரம் இப்படி ஒரு முறைப்பாடு வந்திருக்கின்றது என்று ஏன் சொல்லவில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எல்லா விடயத்தையும் எல்லாரிடமும் கலந்தாலோசிக்க வேண்டிய அவசியம் இல்லை. சபையில் இந்த கேள்வி கேட்டதற்காக பதில் சொல்லுகின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இது ஒரு இறுதிக் கூட்டமாக இருந்தாலும் நாம் ஒரு சுமூகமான முறையில் தீர்த்துக் கொள்ள வேண்டும். கௌரவ உறுப்பினர் அவர்களுக்கு உண்மையாக அவருக்கு எதிராக நாற்றம் என்று சொல்லி இங்கு வந்திருக்கின்றது. இரண்டு பேரும் சபையில் பேசிக்கொள்கின்ற நேரம் தான் அவருக்கும் விளங்குகின்றது இப்படி வந்தது என்று, நான் பல முறை சொல்லியிருக்கின்றேன். அது எடுக்கப்பட்ட தீர்மானம். அதனை தவிசாளர் தடுப்பதற்கு எந்த கட்சி பேதம் இல்லை. அதற்கு நான் பொறுப்பேற்கின்றேன் என்று சொல்லியிருக்கின்றேன். இன்றைக்கு எமது சபைக்கு மூன்று உறுப்பினர்கள் புதிதாக வந்திருக்கின்றார்கள். நாம் இவ்வளவு சபையில் எவ்வளவு சமூகமாக நடந்து கொண்டு இன்றய சபையில் கௌரவ தவிசாளர் அவர்களுக்கும் நமது குரல் சத்தம் கூடுதலாக இருப்பதற்காக மோதல் நிலை மாதிரி என்று நினைத்துக் கொள்ள கூடாது. புதிதாக வந்த கௌரவ உறுப்பினர்களைக் கூட நாம் வாழ்த்திப் பேசாமல் ஏனைய விடயங்களை பேசுவது அவர்களுக்கு இன்னொரு சந்தர்ப்பம் கிடைக்கின்றதோ தெரியாது.

உண்மையிலேயே நான் கௌரவ உறுப்பினர் காலித் அவர்களை இந்த அரசியலுக்குள் எப்படி உள்வாங்கலாம் என்று பகீரத பிரேயத்தனம் எடுத்தேன். அல்லாஹுத்தஆலா நாயகன் அவராகவே விரும்பி வந்து நல்ல கருத்துக்களை சொல்கின்ற நேரம் அவர்கள் எப்படி நினைத்தாலும் சரி கௌரவ உறுப்பினர் அன்வர் அவர்கள் இருக்கின்றார்கள். எனக்கு உடன் பிறவாத இரண்டு சகோதரர்கள் மாதிரி நினைத்த பிள்ளைகள் வந்திருக்கின்றார்கள். அதேபோல் நான் சென்ற சபையில் இருக்கின்ற நேரம் மீரா முகைதீன் அவர்களும், ஷிப்லி அவர்களும் மிகவும் எனக்கு பிடித்த ஆட்களாக தென்பட்டார்கள். கௌரவ உறுப்பினர் மீரா முகைடீன் அவர்கள் வந்ததை நாங்கள் சபை சார்பாக வாழ்த்து தெரிவிக்க வேண்டும். நான் உப தவிசாளர் என்ற வகையில் அவர்களை வரவேற்க வேண்டும். அதே போல் சகோதரி அவர்களையும் வீரமுனை வட்டாரத்திற்கு ஒரு ஆளாக போட்டோம். நான் எனது கட்சிக்கு நன்றி செலுத்த வேண்டும். எனக்கு மகுடம் சூட்டிய SLFP இனை என்றைக்கும் மறக்க மாட்டேன். நான்தான் துரோகம் செய்திருப்பேனே தவிர கட்சி எனக்கு துரோகம் செய்யவில்லை. நாங்கள் போட்ட அனைவருமே உறுப்பினராக வந்திருக்கின்றார்கள். எந்த வட்டாரத்திற்கும் கிடைக்காத பாக்கியம் கிடைத்திருக்கின்றது. எனவே சபைக்கு வந்த உங்களை மீண்டும் இந்த சபைக்கு யார் வருகின்றார்களோ தெரியாது. உங்களை நாங்கள் மிகவும் கன்னியமான முறையில் சபை சார்பாக நானும் ஒரு உப தவிசாளர் அதே நேரம் எனது கட்சியை சேர்ந்த இரண்டு துடிப்பாக செய்யக்கூடியவர்கள் வந்தததை சபை சார்பாக மனமார்ந்து வரவேற்கின்றோம். மற்றவர் தற்போது நான் இணைந்த கட்சியில் வந்திருக்கின்றார் அவரையும் கன்னியப்படுத்தி வரவேற்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மலையடி – 4 சம்மந்தமாக நான் அந்த வட்டாரத்தின் உறுப்பினர். எனக்கும் அதில் உரிமை இருக்கின்றது நானும் கதைக்க வேண்டும். குழு ஒன்று அமைத்து அந்த வடிகானை செய்வதற்கு முன்னாள் தவிசாளர் அவர்கள் இருக்கும் போது அங்கீகாரம் வழங்கப்பட்டது. அது செய்யப்படவில்லை. பழைய தொழில்நுட்ப உத்தியோகத்தர் இடமாற்றம் செய்யப்பட்டு 2 வருடங்களுக்கு மேலாகின்றது. அந்த வடிகானுக்கு மதிப்பீட்டறிக்கை செய்திருக்கின்றார். எனக்கு எவ்வளவு ஆவேசம் இருக்கும். எனக்கு தெரியாமல் மார்கெட் செய்யப்பட்டிருக்கின்றது. ஒரு பாதைக்கு கொங்கிறீட் இடப்பட்டிருக்கின்றது. எனக்கு மதிப்பீட்டறிக்கை செய்த வேலை செய்து தரப்படவில்லை.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.நபீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறையில் லேக் வீதி அல் முனீர் பாடசாலை வீதி. RDD இனால் காபட் இடப்பட்டுள்ளது. அதில் இரண்டு பாலம் உடைந்து இருக்கின்றது. அதனை பல தடவை RDD இற்கு அறிவித்தும் அது செய்யப்படவில்லை. ஆகவே பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் இதனை ஒரு பிரேரணையாக எடுத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.ஏ.தம்பிக்கண்டு அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று நடைபெற்ற இந்த சபை கூட்டத்தில் கடந்த காலத்தில் நடைபெற்ற சில சம்பவங்கள் மீண்டும் மீண்டும் இங்கு பேசப்பட்டு, இந்த சபையில் எங்களைப் போன்ற புதிதாக வந்தவர்களுக்கு பேசுவதற்கு இடம் தரப்படவில்லை என்பது மிகவும் மன வருத்தத்துடன் கூறிக்கொண்டு, வேறு விடயம் என்ற விடயத்தில் சில கருத்துகளை முன் வைக்கலாம் என்று நினைக்கின்றேன். எதிர்வரும் 14-ஆம் திகதி சம்மாந்துறையில் முன்னாள் அமைச்சர் கௌரவ அதாவுல்லா அவர்களுடைய தலைமையில் பிரதேச அபிவிருத்தி கூட்டம் நடைபெறுவதாக கூறி இருந்தீர்கள். அந்த கூட்டத்தில் சில விடயங்களை பேசுவதற்கு இந்த சபை முடிவெடுத்திருக்கின்றது. நானும் அந்த சபையில் நீங்கள் பேசுவதற்கு சில விடயங்களை குறிப்பிடலாம் என்று நினைக்கின்றேன். அதை நீங்கள் கவனம் எடுத்து இந்த விடயங்களையும் அந்த கூட்டத்தில் பேசுமாறு உங்களை அன்பாக கேட்டுக் கொள்கின்றேன்.

முதலாவது எங்களுடைய ஊருக்கு ஏற்கனவே பல அரசியல்வாதிகளினுடைய முயற்சியினால் கிடைக்கப்பட்ட சில சேவைகள் தற்போது நமது ஊரை விட்டு நழுவி விட்டது. அதற்கு ஒரு காரணம் கொரோனா. அந்த கொரோனா என்ற கொடூர எதிரியை சுட்டிக்காட்டி எமது ஊரில் இருந்த CTB டிப்போ கல்முனைக்கு மாற்றப்பட்டு இருக்கின்றது. தற்போது அந்த இடத்தில் CTB இற்குரிய Store இருக்கின்றது. அங்கே ஒரு கட்டடம் இருக்கின்றது எல்லா வசதிகளும் இருக்கின்றது. ஆனால் பஸ்களும் அங்கு வேலை செய்த ஊழியர்களும் தான் கல்முனைக்கு மாற்றப்பட்டு இருக்கின்றார்கள். தற்போது இவர்கள் அங்கே சென்றதும் கல்முனை டிப்போ அதாவது வீழ்ந்து கொண்டிருந்த கல்முனை டிப்போவிற்கு சம்மாந்துறை டிப்போ பஸ்களும் ஊழியர்களும் சென்று முட்டுக் கொடுத்த மாதிரி இருக்கின்ற காரணத்தினால் அங்கு இருந்து இவர்களை திரும்ப சம்மாந்துறைக்கு அனுப்புவதற்கு அங்குள்ள நிர்வாகம் விரும்பவில்லை. ஆகவே CTB டிப்போ எங்களது ஊருக்கு கட்டாயம் தேவை. அது கொண்டு வரப்பட வேண்டும். அதற்கு மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுவது CTB இல் உள்ள DGM இந்த டிப்போவை சம்மாந்துறைக்கு மாற்றுங்கள் என்று ஒரு Order மட்டும் கொடுத்தால் அது இங்கே திரும்ப வரக்கூடியதாக இருக்கும். இந்த விடயத்தை பிரதேச அபிவிருத்தி கூட்டத்தில் முன்வைக்க வேண்டும் என்று நான் அன்பாக கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்ததாக சம்மாந்துறையில் MPCS நாங்கள் அறிந்த வரையில் கிட்டத்தட்ட 200க்கும் மேற்பட்ட ஊழியர்களோடு அலங்கரிக்கப்பட்ட இடம். தற்போது அந்த இடம் மிகவும் கவலைக்குரிய இடமாக புறக்கணிக்கப்படுகின்றது. இங்கே கௌரவ உறுப்பினர்கள் கூறினார்கள் அதனுடைய சொத்துகள் பராமரிப்பில் இல்லாத படியினால் நாங்கள் அதனை எங்களது சபையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வர வேண்டும் என்று ஆதங்கப்படுகின்றார்கள். அப்படி இல்லை மீண்டும் அந்த MPCS இனை நாங்கள் புனரநிர்மானம் செய்வதற்கு சகல ஒத்துழைப்புகளையும் வழங்கி இந்த ஊரில் கடந்த காலத்தில் அதிகமான ஊழியர்கள் 200க்கும் மேற்பட்டவர்களினுடைய குடும்பங்கள் அந்த ஸ்தாபனத்தை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்தது. தற்போது அதனை மீண்டும் கட்டியெழுப்பினால் இவ்வாறான உதவிகள் பல மக்களுக்கு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புகள் ஏற்படும். எனவே அந்த MPCS இனை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு எங்களது சபையின் ஊடாகவும் நாங்கள் அதற்கு ஆலோசனை வழங்கி வழங்க வேண்டும். அதேபோல் பிரதேச அபிவிருத்தி கூட்டத்தில் MPCS இனை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு பலமான ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

அடுத்ததாக எமது ஊர் அறுவடை காலங்களில் பல மக்கள் யானைகளினால் கொலை செய்யப்படுகின்றார்கள். இது ஏழை விவசாயிகள் கொலை செய்யப்படுவது அநியாயமான ஒரு துர்பாக்கியமான ஒரு சம்பவம். யானையினுடைய அட்டகாசத்தினை நாங்கள் குறைப்பதற்கு இந்த சபையினால் எடுக்கக்கூடிய அத்தனை ஒத்துழைப்புகளையும் நாங்கள் வழங்குவதோடு இதை நிரந்தரமாக யானையின் பிரச்சினை எவ்வாறு ஏற்படுகின்றது இதனை எவ்வாறு நாங்கள் குறைத்துக் கொள்ளலாம் என்ற விடயத்தை இந்த சபையில் நாங்கள் ஆராய வேண்டும். நான் அறிந்த மட்டில் யானை வரும் எல்லை வட்டைகளான கறங்காவட்டை போன்ற வட்டைகள் ஏனைய வயல் நிலங்கள் செய்வதற்கு முன்பு செய்து அறுவடை செய்கின்ற காரணத்தினால் யானைகள் அந்த வழியினால்

வந்து ஏனைய வட்டைகளில் உள்ள பயிர்களை சேதப்படுத்துவதோடு, அங்கு காவலுக்கு நிற்கின்ற மக்களையும் கொலை செய்கின்றது. ஆகவே எல்லையில் உள்ள வட்டைகளை மற்ற பகுதியில் உள்ள காணிகள் செய்வதற்கு பின்னர் செய்வதற்கான ஒரு தீர்மானத்தினை பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்தில் எடுக்கப்பட்டால் யானையினுடைய அட்டகாசம் நூற்றுக்கு நூறு வீதமாக இருக்கின்ற பிரச்சினை 90 வீதமாக குறையும் என்று நான் எதிர்பார்க்கின்றேன். இந்த விடயத்தையும் பிரதேச அபிவிருத்தி கூட்டத்தில் முன்வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இங்கு எல்லா அங்கத்தவர்களும் இறுதிக் கூட்டம் இறுதிக் கூட்டம் என்று பேசி இருந்தார்கள். இது இறுதிக் கூட்டமாகவும் இருக்கலாம் இன்னும் ஆறு மாதம் நீடிக்கப்படலாம். இது இறுதிக் கூட்டம் இன்று எல்லோரும் சொல்லுகின்றபடியினால் நானும் இதை இறுதிக் கூட்டமாக கருதி, நீங்கள் இந்த சபைக்கு தவிசாளராக வந்த மிகக் குறுகிய காலத்தில் நிறைய சேவைகளை செய்திருக்கின்றீர்கள். நிறைய சேவைகளை செய்த ஒரு மனிதருக்கு மனிதனாகிய நாங்கள் நன்றி சொல்லாவிட்டால் இறைவனுக்கும் நன்றி சொல்ல மாட்டோம் என்ற நிலைப்பாடு இருக்கின்ற காரணத்தினால் நீங்கள் இந்த குறுகிய காலத்தில் செய்த சேவைகளில் ஒரு சிலவற்றை குறிப்பிட்டு மற்றவர்களும் பேசுவதற்கு இடம் கொடுப்பதற்காக சுருக்கமாக கூறுகின்றேன்.

தற்போது ஹிஜ்ரா சந்தி மின்விளக்குகளால் சிரிக்கின்றது. ஹிஜ்ரா சந்தை சன நடமாட்டத்தால் நடனம் ஆடுகின்றது. யானை தாக்கிய போது நீங்கள் அந்த இடத்திற்கு சென்று அந்த குடும்பத்தார்களுக்கு அனுதாபம் தெரிவித்த விடயம் வரவேற்கத்தக்கது, பாராட்டத்தக்கது. நீங்கள் பல பிரமுகர்களை உங்களது காலத்தில் பல சந்திப்புகளையும் தரிசனங்களையும் செய்துள்ளீர்கள். facebook இல் புகைவண்டி நிறைய வேலைகளை ஓடிக் கொண்டிருக்கின்றது. சம்மாந்துறை மக்கள் கௌரவ தவிசாளர் அவர்களே உங்களை முன்பிருந்த இந்த தவிசாளர் கதிரையை அலங்கரித்தவர்களோடு ஒப்பிட்டுப் பேசுகின்றனர். இது உங்களுடைய எதிர்கால முன்னேற்றத்திற்கு மக்கள் காட்டும் பச்சை கொடியாகும். யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்று சொல்லுவார்கள் இந்த பழமொழிக்கு ஏற்ப நீங்கள் நல்ல பல சேவைகளை செய்ய வேண்டும் என்று வாழ்த்தி எனக்கு இந்த சந்தர்ப்பத்தில் பேசுவதற்கு இடம் தந்தமைக்காக நன்றி தெரிவித்து விடை பெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் தம்பிக்கண்டு அவர்கள் சொன்னதில் யானை கட்டுப்பாட்டு விடயமாக ஏற்கனவே GA உடன் கூட்டம் ஒன்று நடைபெற்று கலந்தாலோசிக்கப்பட்ட விடயம் மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தில் தீர்மானமாக எடுத்து உரிய இடத்திற்கு அறிவிப்பதற்கு தீர்மானித்திருக்கின்றார்கள். புத்தங்கல காட்டில் தான் அதிகமான யானைகள் இருக்கின்றது. புத்தங்கல காட்டில் இருந்து யானைகள் வருகின்ற வாயிலை காவல் பார்ப்பது ஒரு விடயம் மாத்திரம்தான். புத்தங்கலயை அண்மித்து இருக்கின்ற கறங்கா, வளத்தாப்பட்டி போன்ற அந்த வயல்கள் அவ்வளவும் இறுதியாக விவசாயம் செய்வதற்கு நீர் பாசனத் திணைக்களத்திற்கு அவ்விடத்திலே ஆலோசனை வழங்கினார்கள். வனவிலங்கு திணைக்களத்தோடு, CVF மற்றும் வட்டை விதானைகள் விழிப்புக்குழு என்று மூன்று சக்திகளும் ஒன்றாக சேர்ந்து காவல் பார்ப்பதால் யானைகள் ஆரம்பத்தில் ஊருக்குள் வருவதை கட்டுப்படுத்தலாம். இது அம்பாரையில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் தீர்மானமாக எடுக்கப்பட்டிருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் எம்.ஏ.தம்பிக்கண்டு அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தைக்காப் பள்ளிவாசல் தெற்கு வீதி திறக்கப்பட வேண்டும் என்று சென்ற கூட்டத்தில் கேட்டிருந்தேன். பள்ளிவாசல் நிர்வாகத்தோடு பேச வேண்டும் என்று கேட்டிருந்தேன். அந்தப் பாதையை திறப்பதற்கு ஒரு தீர்மானம் சபையில் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பள்ளிவாசல் நிர்வாகம் மற்றும் அப் பகுதி மக்கள் சேர்ந்துதான் அந்தப் பாதையை திறப்பதற்கு உடன்பாடு ஒன்று வைத்தோம். பள்ளிவாசல் நிர்வாகம்

விட்டுத்தருவதற்கு தயார். ஆனால் மதில் உடைத்தால் கட்டித் தருவது யார் என்ற பிரச்சினையில் அது இருக்கின்றது. இந்த சபையால் பார்க்காமல் அந்த வீதியில் கட்டப்பட்ட ஒரு கட்டிடத்திற்கு அனுமதி கொடுத்திருக்கின்றது என்று ஒரு பிரச்சினை இருக்கின்றது. 4 அடி பாதையை விடுவதற்கு அந்த மதிலை உடைத்துத்தான் செய்ய வேண்டும். மீண்டும் அவர்களை அழைத்து அதற்கு ஒரு ஏற்பாடு செய்யலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தைக்காப் பள்ளிவாசல் தெற்கு வீதியினை பொதுமக்கள் பாவனைக்கு திறப்பது தொடர்பாக மதில் கட்டுகின்ற வேலையை Trustee Board இடம் பாரம் கொடுப்போம். கௌரவ உப தவிசாளர், கௌரவ உறுப்பினர் அஸ்பர், கௌரவ உறுப்பினர் தம்பிக்கண்டு, கௌரவ உறுப்பினர் நளீம், கௌரவ உறுப்பினர் றியாஸ் ஆகியோர்களைக் கொண்ட குழு தைக்காப்பள்ளி நிர்வாகத்தோடு மற்றும் முச் சபைகளோடும் கலந்துரையாடுவோம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தைக்காபள்ளிவாசல் வீதி தொடர்பாக பிரதம நம்பிக்கையாளர்களோடு பேசுகின்ற நேரம் சென்னல் கிராமம் ஜாமியுல் அழ்பர் பள்ளிவாசல் மையவாடியினுடைய மதிலை கட்டுவதற்கும் அந்த விடயத்தை முன்வைக்க வேண்டும்.

**தீர்மானம் - 04/60/27**
தைக்காப்பள்ளிவாசல் தெற்கு வீதியினை பள்ளிவாசல் நிர்வாகம் மற்றும் முச்சபைகளுடன் கலந்துரையாடி பொது மக்களின் பாவனைக்காக திறப்பதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ஏ.தம்பிக்கண்டு |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் ஏ.ஏ.சீ.எம்.நிசாம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த சபைக் கூட்டத்தில் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. போக்குவரத்து சம்மந்தமாக கௌரவ உறுப்பினர் காலித் அவர்களால் முன்வைக்கப்பட்டது. இந்த ஊரில் பஸ் தரிப்பிடம் இல்லாவிட்டாலும் எந்த பஸ் எப்போது வரும் என்று தெரியாமல் அலைந்து திரிகின்றார்கள். Digital Display அமைத்தால் பெறுமதியாக இருக்கும் என்று கூறுகின்றார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தற்போது நாம் 88 தற்காலிக ஊழியர்களுக்கு மாதாந்தம் சபையால் சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். சந்தோசமான செய்தி கௌரவ ஆளுநரை சந்திப்பதற்காக நேரம் கிடைத்திருக்கின்றது. அவர்களை சந்திக்கின்ற நேரத்தில் எமது அமைய ஊழியர்களை இயலுமான அளவுக்கு அரசாங்கத்திற்குள் உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுத்தால் மாதாந்தம் சம்பளம் கொடுக்கின்ற பணத்தை சேமித்து வைக்கலாம். தற்போது இருக்கின்ற நிலமை என்னவென்றால் நாம் எம்மை மட்டும் யோசிக்காமல் 88 பேரின் எதிர்காலத்தை யோசிக்க வேண்டும். சிலர் 07 வருடமாக நிரந்தரமாக்கப்படாமல் வேலை செய்து கொண்டிருக்கின்றார்கள்.

**கௌரவ உறுப்பினர் ஏ.ஏ.சீ.எம்.நிசாம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அப்துல் மஜீட் மண்டபத்தின் முன்னால் அழகான மரங்கள் நடவேண்டியிருக்கின்றது. அதற்கு பாம்ரி கன்றுகள் கொள்வனவு செய்வதற்கு சபை அனுமதியினை கேட்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் நிசாம் அவர்கள் பல தடவை என்னை சந்தித்து கதைத்தார். அப்துல் மஜீட் மண்டபத்திற்கு முன் இருக்கின்ற வாகை மரம் பட்டுப்போய் விட்டது. பொதுமக்களுக்கும் பாதசாரிகளுக்கும் இடைஞ்சலாக இருப்பதனால் அதனை தறிப்பதற்கும், பக்கத்தில் இருக்கின்ற மரத்தின் கொப்புகளையும் வெட்டி ஆபத்து இல்லாமல் மரம் வளர்வதற்கும், அத்தோடு அப்துல் மஜீட் மண்டபத்திற்குள் சுவரோரத்தில் அழகான மரங்கள் பாம்ரி கன்று கொள்வனவு செய்து நடுவதற்கு கௌரவ உறுப்பினர் நிசாம் அவர்கள் ஒரு பிரேரணையாக முன்வைத்திருக்கின்றார். உங்களது அனுமதியை கேட்கின்றேன்.

**தீர்மானம் - 04/60/28**
அப்துல் மஜீட் மண்டபத்தின் முன் இருக்கின்ற வாகை மரத்தினை வெட்டுவதற்கும், அப்துல் மஜீட் மண்டபத்திற்குள் பாம்ரி கன்றுகள் கொள்வனவு செய்து நடுவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.ஏ.சீ.எம்.நிசாம் |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
அப்துல் மஜீட் மண்டபத்திற்கு முன்னாள் Cobra light உம் வாகனத் தரிப்பிட பக்கமாக 02 cobra light உம் பொருத்த வேண்டும். அத்தோடு முகாமிட்டிருந்த மீனவர்களை ஒரு கொடையின் கீழ் கொண்டு வந்திருக்கின்றோம். அதிலே எங்களது கௌரவ உப தவிசாளர், நான் அதிகமான பிரேயத்தனங்கள், எதிர்ப்புக்கள் விமர்சனங்கள், சண்டைகள் இப்படியானவைகள் நடந்து முடிந்திருக்கின்றன. தற்போது நிலைமை என்னவென்றால் மீன் வியாபாரிகளின் வருகை கூடுதலாக இருப்பதனால் நெரிசல் ஏற்பட்டிருக்கின்றது. அந்த நெரிசலை போக்குவதற்கு இலகுவான வழியை நான், உப தவிசாளர் அவர்கள் இனங்கண்டது கௌரவ உறுப்பினர் நஜீம் அவர்களுக்கும் நன்றாக தெரியும் என்று நினைக்கின்றேன். தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் ஆலோசனைகளையும் பெற்றிருக்கின்றோம். அந்த அடிப்படையில் கடை இலக்கம் 44 தொடக்கம் 50 வரையிலான அந்த கட்டிடத் தொகுதியின் கூரையை மட்டும் வைத்துவிட்டு கீழ் உள்ள கட்டடங்களை திறப்பதன் மூலமாக சன நெரிசலை குறைப்பதற்கும் விசாலமான ஒரு நிலப்பரப்பை கொண்ட சந்தையாகவும் தென்படும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதனை உரிய திணைக்களத்துக்கு அறிவித்த பின்னர் தான் செய்யலாம். அதனை ஒரு தீர்மானமாக எடுப்போம்.

**தீர்மானம் - 04/60/29**
ஹிஜ்ரா சந்தையினுள் அதிகமான மீன் வியாபாரிகளின் வருகையினால் நெரிசல் ஏற்பட்டுள்ளது. இதனால் 44 – 50 வரையிலான கட்டடத் தொகுதியை கூரையை வைத்துவிட்டு கீழ் கட்டடங்களை திறந்து நெரிசலை குறைப்பதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் ஏ.ஏ.சீ.எம்.நிசாம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் சென்ற மாத கூட்டறிக்கையில் 34 ஆவது பக்கம் நீர் இணைப்பு பெறுபவர்கள் வீதியில் அகழி வெட்டுவது மூடப்படாமல் இருக்கின்றது. அதற்கு ஏதாவது பொறிமுறைகள் இருக்கின்றதா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஒரு பொறிமுறையை ஏற்படுத்துவோம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.ஏ.சீ.எம்.நிசாம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது பிரதேச சபையில் சேதன பசளை உற்பத்தி நடைபெறுகின்றதா? வாழைத் தண்டுகள், முருங்கை மரங்கள் இருந்து கொண்டே இருக்கின்றது. அதை அகற்றுவதற்கு அல்லது ஒரு நாளைக்கு நாங்கள் சிரமதானம் செய்தால் அதிகமானவைகள் எடுக்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் அவர்களே, எங்களுக்கு ஆளணி பற்றாக்குறை இருக்கின்றது. மிகவும் சிரமத்திற்கு மத்தியில்தான் நாளாந்த குப்பைகளை சேகரிக்கின்றோம். சிலர் வேலையை விட்டு செல்கின்றார்கள். இருக்கின்றவர்களை வைத்துதான் சமாளிக்க வேண்டி இருக்கின்றது. இயந்திரங்களும் இல்லை. இதைப் பற்றி ஆளுநரிடம் கதைப்பதற்காக நேரம் கேட்டிருக்கின்றோம் தந்திருக்கின்றார்கள். எல்லோரும் பிரார்த்தனை செய்யுங்கள் கேட்கின்ற கோரிக்கைகள் வெற்றியடைவதற்கு. சேதன பசளை தயாரிக்கும் இடத்தில் 10 பேர் தேவை 2 பேரைத்தான் போட்டிருக்கின்றோம். உற்பத்தியும் குறைவாகத்தான் ஏற்படும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.ஏ.சீ.எம்.நிசாம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே புதுப்பள்ளியில் ஒரு கூட்டம் ஒன்று போட்டோம். CDO, AI எல்லோரும் வந்தார்கள். அதில் தமிழ் பிரிவு – 01 ஐ மாத்திரம் பரீட்சார்த்தமாக செய்ய இருக்கின்றோம். சபையின் அனுமதியினை தாருங்கள்.

**கௌரவ உறுப்பினர் பீ.எம்.மீரா முகைடீன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது ஊரில் இரண்டு மூன்று கடையறைகளை சேர்த்து வடிகான்களுக்கு தொடர் கொங்கிறீட் இட்டு எதிர்காலத்தில் துப்புரவு செய்ய இயலாத ஒரு துர்ப்பாக்கிய செயலை செய்து கொண்டிருக்கின்றார்கள். அதை தவிர்ப்பதற்கு துண்டு துண்டான சிலப் போட வேண்டும் என்று ஒரு அறிவித்தலை கொடுப்போம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதற்குப் பின்னர் நடக்கின்ற கட்டிட நிர்மாணங்கள் கடைகளுக்கு முன்னால், வீடுகளுக்கு முன்னால் கொங்கிறீட் இடுகின்ற போது நீங்கள் சொல்கின்ற மாதிரி துண்டு துண்டான சிலப் போடுவதனால் துப்பரவு செய்வதற்கு இலகுவாக இருக்கும். இதனை ஒரு தீர்மானமாக எடுப்போம்.

**தீர்மானம் - 04/60/30**

வீடுகளுக்கு, கடையறைகளுக்கு முன் வடிகான்களின் மேல் தொடராக கொங்கிறீட் Slab போடாது, கழிவகற்ற வசதியாக துண்டு துண்டான கொங்கிறீட் Slab போட வேண்டும் என்பதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | பீ.எம்.மீரா முகைடீன் |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் பீ.எம்.மீரா முகைடீன் அவர்கள்:**

இந்த சபை இறுதியான சபை அமர்வு என்ற படியினால் உங்களோடு சேர்ந்து Group Photo எடுப்பதற்கு, இந்த சபையில் இருந்து இராஜினாமா செய்த உறுப்பினர்களையும் முடியுமானால் எடுப்பது நல்லது என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ். நிலுவ்பா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எல்லோரின் கருத்துப்படி பார்த்தால் இது இறுதி சபை கூட்டமாக இருந்தாலும் இருக்கலாம். இந்த சபைக்கு புதிதாக தெரிவு செய்யப்பட்டு வந்த கௌரவ உறுப்பினர்கள் ஏற்கனவே இந்த சபையில் தீர்மானம் மூலம் எடுக்கப்பட்ட விடயங்களை அவர்களுடைய பிரேரணையாகவும், ஆலோசனையாகவும் இவ்விடத்தில் முன் வைத்தார்கள். அதாவது இரவு நேரங்களில் பாடசாலை மாணவர்களுக்கான பிரத்தியோக வகுப்புகள் சம்பந்தமாக ஏற்கனவே ஒரு பிரேரணை சமர்ப்பித்திருந்தேன். முன்னாள் கௌரவ தவிசாளர் அவர்களால் வகுப்புக்களை நடாத்துகின்ற உரிமையாளர்களை அழைத்து கூட்டம் நடத்துவதாக தீர்மானம் எடுக்கப்பட்டது. அது சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதா? இல்லையா? என்பது தெரியாமல் இருக்கின்றது.

அதேபோன்று வீதியோரங்களில் வாகனங்களை நிறுத்திக் கொண்டு வியாபாரம் செய்பவர்களால் வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றது என்று ஏற்கனவே இந்த சபையில் முன்மொழிவு ஒன்றை முன்வைத்தேன். வீதி பொலீஸ் பாதுகாப்பு உத்தியோகத்தர் மூலம் அதனை செய்வோம் என்று சொன்னார்கள். அதற்கு ஏதும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதா? என்பது எனக்கு தெரியவில்லை. இதே போன்று ஒவ்வொரு விடயத்தையும் சொல்லிக் கொண்டே போகலாம் எங்களுடைய வளத்தாப்பிட்டியில் உருவாக்கப்பட்ட வில் கழகத்திற்கு நேற்று கூட ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அங்கு மின்சாரமும் இல்லை, நீர் இணைப்பும் இல்லை அதற்குரிய ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கின்றார்கள் அதனை பெற்றுத் தந்தால் எங்களுக்கு இலகுவாக இருக்கும் என்று சொன்னார்கள். அதை இந்த சபையில் இருக்கும் காலத்தில் செய்தால் பிறகு வருபவர்களுக்கும் அது உதவியாக இருக்கும் என்று இவ்விடத்தில் கூறிக்கொள்கின்றேன்.

இந்த சபையில் இரண்டு மூன்று மாதங்களுக்கு முதல் பாடசாலை மாணவர்களுக்கு மாதவிடாய் காலங்களில் ஆரோக்கிய துவாயினை அரசாங்கம் மூலம் இலவசமாக வழங்குவதற்கு எங்களது சபையில் ஒரு பிரேரணையினை அனுப்புவதற்கு கௌரவ முன்னாள் தவிசாளர் அவர்களிடம் இது சம்பந்தமாக எத்தி வைத்தேன். கௌரவ உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து ஏகமனதான தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டது. அது சம்பந்தமாக இதுவரை எவ்வாறு நடைபெற்று இருக்கிறது என்று இதுவரைக்கும் தகவல் கிடைக்கவில்லை. மார்ச் 8 ஆந் திகதி சர்வதேச மகளிர் தினம் எமது சபையில் இரண்டு வருடங்களாக சர்வதேச மகளிர் தினத்தை நடாத்தி வந்தோம். கடந்த காலங்களில் பொருளாதார நெருக்கடி, ஆட்சி மாற்றம், கொரோனா போன்ற கொடிய சவால்களுக்கு மத்தியில் நாங்கள் முகம் கொடுக்க வேண்டி இருந்ததால் மகளிர் தினத்தை கொண்டாடுவதற்கு எங்களது சபையின் நிதி பற்றாக்குறையினாலும், அதிகமானவர்களை கூட்ட இயலாத சந்தர்ப்பம் இருந்ததினால் செய்யாமல் போனது. இந்த மாதம் இருக்கின்ற கௌரவ உறுப்பினர்களுக்கு எங்களது சபையில் இருந்து பெண்களுக்கான வலுவூட்டல் என்ற நிதியை விடுவித்தால் சபை உறுப்பினர்கள் மூலம் எங்களது வட்டாரத்தில் இருக்கின்ற பெண் தலைமைத்துவங்களுக்கு அவர்களுடைய தொழில் முயற்சிகளை செய்வதற்கு எங்களால் இயன்ற உதவியாக இருக்கும் என்பதை இவ்விடத்தில் விணயமாக கேட்டு விடை பெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

Mobile Service இனை ஒழுங்குபடுத்துவதற்காக சபையினால் ஒரு அனுமதி அட்டை வழங்குவதற்கு அவர்களிடம் தகவல் சேகரிப்பதற்கு ஒரு விண்ணப்பம் கொடுத்து பூரணப்படுத்தி தந்திருக்கின்றார்கள். பிரதான பாதைகளில் வியாபாரம் செய்வதற்கு அனுமதி இல்லை. Mobile Service மூலம் உள் வீதிகளில் வியாபாரம் செய்வதற்கு தான் நாம் கொடுக்கின்ற அனுமதி. அதை மீறி பிரதான பாதைகளில் வியாபாரம் செய்தார்கள் என்றால் அதற்குரிய சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றது. பெண்கள் வலுவூட்டல் சம்பந்தமாக கூறியிருந்தீர்கள். தேர்தல்

ஒன்று அறிவிக்கப்பட்ட காலத்தில் என்னை பொறுத்தமாட்டில் அதை அங்கீகரிக்க இயலாது. இது எமது பணம் அல்ல. பொதுமக்களின் பணம். ஆகவே தேர்தல் ஒன்று அறிவிக்கப்பட்டு இருப்பதனால் அந்த தேவைக்காக விடுவிப்பது இயலாத காரியம் என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, S வாய்க்கால் மடுவத்தை வளைவிற்கு அப்பால் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு எந்த உபயோகமும் இல்லாமல் எங்களது சபைக்கு தாருங்கள் என்று கேட்டு அனுப்பினோம். அதற்கு அவர்கள் இல்லை என்று அனுப்பி இருக்கின்றார்கள். இல்லாவிட்டால் அதை அவர்கள் பராமரிக்க வேண்டும். அவர்கள் இல்லை என்றால் அவர்களுக்கு சொந்தமானது தான் மஜீட்புர வண்டு அதை எங்களது சபை வாகனத்தை கொண்டு செய்யலாமா? எங்களது சபைக்கு தரவேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் பராமரிக்க வேண்டும்.

பொதுமக்கள் துர்நாற்றமான மண்ணை போடுவதால் பிரச்சனையாக இருக்கின்றது என்று முறைப்பாடு சொன்னீர்கள். அது யார் முன் நின்று அந்த கடிதத்தை ஒப்பம் வாங்கினார் என்று தெரியும். இந்த வாய்க்காலை தோண்ட வைக்க வேண்டும் என்று மக்களை ஏமாற்றி வாய்க்காலை தோண்டுவதற்காக என்று ஒப்பம் எடுக்கப்பட்டுள்ளது. ஒரு தேர்தல் கேட்கின்ற வேட்பாளர்தான் செய்திருக்கின்றார்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த சபைக்கு வந்திருக்கின்ற எனது நண்பியான ராஜேஸ்வரி மற்றும் காலித், கௌரவ உறுப்பினர் மீரா முகைடீன் அவர்களையும் மனமார்ந்த வாழ்த்து கூறி, நான் இங்கு பேச வந்த விடயம் என்னவென்றால் எங்களது சம்மாந்துறையில் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், நிறுவனத்தில் ஓய்வு பெற்றவர்கள் இங்கு பூங்காவோ, அவர்களுக்கு பொருத்தமான வாசிகசாலையோ, அவர்களது காலத்தை கழிக்க கூடியவாறு இடங்கள் இல்லாமல் காணப்படுகின்றது. அவர்களிடம் பல திறமைகள் இருக்கின்றது. கலை கலாசாரம் சம்பந்தமான திறமைகள் அதிகமாக காணப்படுகின்றது. அத்திறமைகளை தற்காலத்தில் அவர்களுக்கு பொழுதுபோக்கு பேரப் பிள்ளைகள் மாத்திரம்தான். பிரதேச செயலாளரின் கீழ் சம்மாந்துறை கலை கலாச்சார மண்டபம் ஒன்று இருக்கின்றது. அந்த கலை கலாசார மண்டபத்தினை பல தடவைகள் இந்த சபையில் கதைக்கப்பட்டு அதை உயிர்ப்பிப்பதற்கு நிறைய தடவைகள் கதைக்கப்பட்டுள்ளது. ஆனால் அது சம்பந்தமாக எந்தவிதமான கடிதங்களும் அனுப்பப்பட்டதாக எனக்கு தெரியவில்லை. ஆனால் கலை கலாசார மண்டபத்தை உயிர்ப்பித்து ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், கலையில் ஆக்கபூர்வமாக இருக்கின்ற அனைவரையும் உள்வாங்கி அவர்களுடைய தலைமையில் கலை கலாசார மண்டபத்தினை வழங்க வைத்து, முற்காலத்தில் இருக்கின்ற கவிதைகள், வயதானவர்கள் பாடுகின்ற கவி தற்காலத்தில் மாய்ந்தே போய்விட்டது. கவிகள் எல்லாவற்றையும் நாங்கள் உயிர்ப்பிக்கலாம். ஆகவே நாங்கள் இந்த கலை கலாசார மண்டபத்தினை இந்த சபையின் ஊடாக ஒரு தீர்மானமாக எடுத்து பிரதேச செயலகத்திற்கு அனுப்பி அதனை உயிர்ப்பிக்கலாம் என ஒரு தீர்மானம் வைக்கின்றேன்.

## தீர்மானம் - 04/60/31

பிரதேச செயலகத்தின் பராமரிப்பிலுள்ள ''கலாசார மண்டபத்தினை'' கலைஞர்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் அதன் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கு கடிதம் எழுதுவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் - 04/60/32**

ஹிஜ்ரா மார்க்கட்டிலுள்ள கோழி இறைச்சிக்கடை 02 வருடங்களாக குத்தகைக்கு எவரும் பெறாத காரணத்தினால் சபையின் வருமானத்தை கருத்திற் கொண்டு நாளாந்தம் 500.00 ரூபாவும், மூன்று மாத வைப்புப் பணமும் ஒரு மாத கால கட்டணமுமாக அறவீடு செய்வதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம்.ஜிப்ரி |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் - 04/60/33**

ஜனாதிபதி விளையாட்டுக் கட்டிடத் தொகுதியிலே இருக்கின்ற பெட்மிண்டன் கோர்ட் இனை புணர்நிர்மானம் செய்து அதற்குரிய காபெட், வெளிச்சங்கள், அதற்குரிய நெட் போன்றவற்றை கொள்வனவு செய்து சகல வசதிகளையும் செய்து கொடுப்பதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் - 04/60/34**

சபையின் அலுவலக நடவடிக்கைகளுக்குத் தேவையான பொதுப்படிவங்கள், பதிவேட்டுப் புத்தகங்களை அரச அச்சகத்தில் கொள்வனவு செய்வதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**

இந்த சபையில் ஒரு வருமானத்தை உருவாக்குவதற்காக இரண்டு மூன்று தடவைகள் இங்கு கதைக்கப்பட்டது என்னவென்றால் எங்களுடைய மலக்காம்பிட்டி பள்ளிவாசலுக்கு அருகாமையில் ஓர் பாடசாலை இருக்கின்றது. அந்தப் பாடசாலை ஒரு அரசாங்க சொத்து. அந்த சொத்து தற்போது ஓடுகள் உடைந்து சேதமுற்று காணப்படுகின்றது. அந்த வளவுக்கோ, பாடசாலைக்கோ ஒரு பராமரிப்பு இல்லை. அந்த பாடசாலை மாகாண சபையின் கீழ் தான் இருக்கின்றது நினைக்கின்றேன். இந்த சபையால் ஒரு தீர்மானம் எடுத்தோம் அந்தப் பாடசாலையை பிரதேச சபைக்கு கீழ் எடுத்து அங்கு உணவு சமைத்து சாப்பிடும் அளவுக்கு அதற்குரிய பொருட்களை வைத்து வாடகைக்கு வழங்கி, உணவு சமைத்து சாப்பிடுகின்ற இடமாக அந்த இடத்தை மாற்றலாம் என நினைக்கின்றேன். ஏனென்றால் மல்காம்பிட்டி பள்ளிவாசலுக்கு வெளியூர் ஆட்கள் இங்கு சமைத்து சாப்பிடுவதற்கு வருகின்றார்கள். ஆனால் அவர்களுக்கு போதிய தளபாடங்கள் இல்லை. ஆகவே இதை எங்களது சபையின் வருமானமாக செய்யலாம் என நான் நினைக்கின்றேன்.

அடுத்த விடயமாக சம்மாந்துறையில் பெண் தலைமைத்துவங்கள் அதிகமாக கொண்ட ஊராக சம்மாந்துறை காணப்படுகின்றது. ஆகவே இங்கு அதிகமாக பெண் தலைமைத்துவம் வந்ததன் காரணம் என்னவென்றால் அதிகமான ஆண்கள் வெளிநாட்டுக்கு குடும்பத்திற்கு உழைப்பதற்காக செல்கின்றார்கள். அதனூடாக பல பிரச்சினைகள் எங்களது சம்மாந்துறையில் வருகின்றது. அதனை யாவரும் அறிந்த உண்மை. அதேபோன்று அவர்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளால் வெளிநாட்டுக்கு போவதால் தொலைபேசியை வைத்து அதிகமான பிரச்சினைகள் வருவதனால்

அவர்களுடைய வாழ்க்கை பிரிவடைகின்றது. வாழ்க்கை பிரிவடைவதனால் உடனடியாக ஓர் பிரச்சினையை கண்டவுடன் உடனடியாக அந்த பெண்ணோ, ஆணோ செல்கின்ற இடம் காழி நீதிமன்றம். இது சம்பந்தமாக பல தடவைகள் கதைத்தோம். காழி நீதிமன்றத்திற்கு உடனடியாக செல்கின்ற மக்களை இடைநிறுத்தி பிரதேச செயலகத்திற்கு இது சம்பந்தமான Psychology ஆட்கள் இருக்கின்றார்கள். சபையின் நிர்வாகத்தினர் அல்லது உறுப்பினர்கள், நம்பிக்கையாளர் சபையில் இருந்தும், இணக்க சபையில் இருந்தும், பிரதேச செயலகத்தில் இருப்பவர்களையும் எடுத்து ஒரு குழுவாக அமைத்து அந்த குழுவின் ஊடாக காழி நீதிமன்றத்திற்கு செல்லாமல் இந்த குழுவிடம் ஆலோசனைகளை பெற்று அவர்களால் 10 பிரச்சினைகள் சென்றால் குறைந்தது மூன்று பிரச்சனைகளாவது நிவர்த்தி செய்ய முடியும்.

ஆகவே Divorce களை குறைக்க முடியும். இதனால் மாணவர்களின் கல்வி இடை நிறுத்தப்படாது, தொடர்ந்து பாடசாலைக்குச் சென்று அவர்களது கல்வி உயர்வு நிலைக்கு செல்லும். ஆனால் நாங்கள் இவ்வாறு செய்யாமல் இருந்தால் போதை பொருட்கள் அதிகரிக்கும். மாணவர்கள் தந்தை சண்டை பிடித்துச் சென்றால் தாய் இடியப்பம் சுட்டு விற்பார் அல்லது அடுத்த வீட்டில் பாத்திரம் கழுவுவார். இதனால் ஆண் பிள்ளைகள் வெளியேறி வேலைகளுக்கு சென்று உடம்பு வலியால் போதை வஸ்த்துகளை பாவிக்க தூண்டப்படுகின்றான். ஆகவே இவைகளை நாங்கள் குறைத்துக் கொள்வதினால் நாங்கள் குழுக்களை கட்டாயமாக அமைக்க வேண்டும். இது சம்பந்தமாக பிரதேச சபையிலும் இரண்டு மூன்று தடவை கடிதங்கள் போடப்பட்டிருக்கின்றது. அது எந்த நிலைமையில் இருக்கின்றது என்று எனக்குத் தெரியாது.

இங்கு இருக்கின்ற எல்லோரும் அறிந்திருப்பீர்கள் மௌபியா என்ற ஒரு பெண் பிள்ளை முதலை கடித்து ஒருகால் இழக்கப்பட்டு இந்த சபையில் அந்தப் பிள்ளைக்கு ஒரு தொழில் வாய்ப்பு கிடைத்து, அது சம்பந்தமாக இங்கு தீர்மானம் எடுத்து, Provincial, Chief Ministry, Education எல்லாவற்றுக்கும் சென்று ஆளுநர் கொடுக்கலாம் என்று சொல்லி மீண்டும் ஆளுநர் பயத்தில் மேற்குறித்த இடங்களுக்கு அனுப்பி அது அப்படியோ இருக்கின்றது. அவருடைய File என்னிடம் முழுமையாக இருக்கின்றது. அதனை உங்களிடம் கையளிக்கின்றேன். கௌரவ தவிசாளர் அவர்களே, பரிதாபமான நிலை. இரண்டு வருடத்திற்கு ஒருமுறை புதுக்கால் செய்து போட வேண்டும். அதனை செய்வதற்கு ஒரு கிழமை கண்டியில் நின்று காலை செய்ய வேண்டும். அதை செய்வதற்கு குறைந்தது இரண்டு இலட்சம் ரூபா பணம் தேவை. கால் இல்லாத பிள்ளைக்கு யாரும் திருமணம் முடிக்க விரும்பமாட்டார்கள். தொழில் இருக்கின்ற காரணத்தினால் திருமணம் முடிக்க வருவார்கள். இதை நான் பெண் உறுப்பினர் என்ற அடிப்படையில் பெண் பிரச்சினையாக இருக்கின்றது நடந்த சபைக்கு நான் ஒரு பெண் உறுப்பினர் என்ற அடிப்படையில் அதனை தெரிவித்து இந்த சபையால் முடிவெடுக்குமாறும் பணிவன்பாய் கேட்டுக் கொண்டு, இறுதி உரையாக இருப்பதனால் யாருக்கும் ஏதாவது குற்றங்கள் செய்திருந்தால் மன்னித்துக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.நபீல் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் சிஹாமா கூறிய மல்காம்பிட்டி பள்ளிவாசல் பாடசாலைக் கட்டிடம் தற்போது நம்பிக்கையாளர் சபையின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகின்றது. அவர்கள் அதைச் சுற்றி வேலி அமைத்து பராமரித்து வருகின்றார்கள் என்பதை கௌரவ உறுப்பினருக்கு அறியத் தருகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எனது வட்டாரத்தில் கருத்திட்ட வீதி காபட் இடுவதற்காக திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அருகில் வடிகான் இருக்கின்றது. வீதியை குறுக்கறுப்பதற்கு பாலம் அமைக்கப்படவில்லை. முன்னாள் தவிசாளர் அவர்களிடமும் கதைத்திருக்கின்றேன். அவ்விடத்தில் இருந்த கல், மண் எல்லாம் ஏற்றப்பட்டுள்ளது. மக்கள் இந்த வீதியில் இருந்து மற்ற வீதிக்கு செல்ல இயலாது. வடிகான் அமைக்கப்பட்டுள்ளது அதற்கு மேல் மூடி இல்லை. இதனை உரிய ஒப்பந்த காரர்களோடு பேச வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதனை எதிர்வரும் 14 ஆந் திகதி பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் கதைப்போம். இன்னுமொரு இடத்திலும் அவ்வாறு இருக்கின்றது.

இறைவனுக்கு எல்லாப்புகழும். இவ்வளவு காலமும் ஒற்றுமையாக இன, மத, பேதம் இல்லாமல் எல்லா தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட ஒரு முன்மாதிரியான சபையாக நடாத்தியதற்கு சகல உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு, குறிப்பாக முன்னாள் தவிசாளர் ஏ.எம்.எம்.நௌசாட் மிகவும் திறமையான நிர்வாகத்தை கொண்டு நடாத்தி இந்தப் பிராந்தியத்திற்கு முன்னுதாரணமான சபையாக விளங்கவைத்ததற்கும், புதிதாக இன்று இந்த சபைக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களை இறுதியாக வரவேற்று, எதிர்காலத்திலும் இந்த சபையில் இருக்கின்ற கௌரவ உறுப்பினர்கள் தேர்தல் கேட்கின்றவர்கள் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டு அமையப் போகின்ற சபையிலே கௌரவ உறுப்பினர்களாக இந்த சபைக்கு வர வேண்டும் என்று பிரார்த்திப்பதோடு, இவ்வளவு காலமும் ஒத்தாசையாக இருந்த பிரதேச சபையில் இருக்கின்ற ஊழியர்கள் குறிப்பாக எங்களது செயலாளர் ஜனாப் கிதிர் முஹம்மட் உட்பட ஏனைய ஊழியர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து, இக் கூட்டத்தினை இத்துடன் முடித்துக் கொள்கின்றேன்.

I.L.M.மாஹிர்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
Tel No : 067 2260178
Fax : 067 2260178
E.mail : strps2009@yahoo.com

கௌரவ தவிசாளர்
கௌரவ உப தவிசாளர் / கௌரவ உறுப்பினர்
சம்மாந்துறை பிரதேச சபை.

**கூட்டறிக்கை அனுப்புதல்**

கடந்த 2023.02.21 ஆந் திகதி இடம் பெற்ற எமது 04வது சபையின் 59வது அமர்வின் கூட்டறிக்கை இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகின்றது. இக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இருக்குமாயின் எதிர்வரும் 2023.03.08 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

I.L.M.மாஹிர்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
Tel No : 067 2260178
Fax : 067 2260178
E.mail : strps2009@yahoo.com